விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria

Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு
துரித தபால்கள்,
பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1052)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 24 வெள்ளிக்கிழமை (08.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 020

## தற்போது உள்ளதைப் பாதுகாருங்கள் பின்னர் மேலதிகமாக கேளுங்கள்

### கூட்டமைப்புக்கு ஜெய்சங்கர் அறிவுரை

(கொழும்பு)

தற்போதைய அரசமைப்பில் உள்ள விடயங்களை பாதுகாக்க முயற்சியுங்கள். அதன் பின்னர் மேலதிகமாக கேளுங்கள். இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அறிவுரை 19

## வடக்கில் நேற்றும் 11 பேருக்கு கொரோனா

### யாழில் நால்வருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நேற்று வியாழக்கிழமை 689 பேருக் 19

## அனைத்து தமிழ்த் தரப்பும் ஓரணியில் நின்றால்

# தமிழ் மக்களை இந்தியா கைவிடாது

### பிளவுபட்டுள்ளதால் அழுத்தம் கொடுக்க முடியாதுள்ளது கூட்டமைப்பிடம் ஜெய்சங்கர் நேரில் தெரிவிப்பு



*(கொழும்பு)*

*அனைத்துத் தமிழ்த் தரப்பும் ஓரணியில் நின்றால் தமிழ் மக்களை இந்தியா கைவிடாது.*

*தமிழர் தரப்பு பிளவுபட்டுள்ளதால் இலங்கை அரசுக்கு இந்தியாவால்கூட அழுத்தம் கொடுக்க முடியாது என கூட்டமைப்பிடம் நேரில் தெரிவித்தார் ஜெய்சங்கர்.*

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## கொரோனாவால் மேலும் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் மூன்று கோவிட் உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். 19

## தொண்டைமானாறில் இந்திய மீனவர்கள் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை 19

## மோ.சைக்கிளில் வந்த இளம் பெண்ணால் வயோதிபப் பெண்ணின் தாலிக்கொடி அபகரிப்பு

### இணுவிலில் சம்பவம்

(கரணவாய்)

வீட்டுத் திட்டம் தருவதாக கூறி வயோதிப பெண்ணின் தாலிக்கொடியை 19

## நிரந்தரமான அரசியல் தீர்வு தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்

### இந்தியாவின் நிலைப்பாட்டை கூட்டமைப்பிடம் தெரிவித்தார் ஜெய்சங்கர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா 19

## அமெரிக்காவில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம்

4 பேர் பலி; 52 பேர் கைது



10ஆம் பக்கம் பார்க்க

## மதுபானம் என நினைத்து ரின்னர் அருந்தியவர் மரணம்

### நாவற்குழியில் சம்பவம்

(கரணவாய்)

மதுபானம் என நினைத்து ரின்னர் அருந்திய இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தென்மராட்சி 19

## வாள்முனையில் 12 பவுண் நகைகள் கொள்ளை

### முகமூடிக் கொள்ளையர்கள் வவுனியாவில் அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த முகமூடி கொள்ளையர்கள் வாள் முனையில் அங்கிரு 19

## காங்கேசன்துறை கடலில் 170 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்பரப்பில் சுமார் 170 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை கடற்படையினர் முன் 19

## புலிகள் தயாரித்த சக்தி வாய்ந்த கிளைமோர்

### சுழிபுரத்தில் கண்டறிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தயாரிப்பான அதி 19

## வட்டு.தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலைக்கு பயன்படுத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

யாழ மாவட்டத்தில்கொரோனா அவசர நிலை ஏற்படும் போது வட்டுக்கோட்டை 19

# மூடப்பட்டுள்ள சந்தைகளை மீளத் திறப்பது சாத்தியமற்றது

## யாழ். மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது மூடப்பட்டுள்ள சந்தைகளை தற்போதைய நிலைமையில் மீளத் திறப்பது சாத்தியமற்றது என யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் திருமண மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், பிறந்தநாள் நிகழ்வுகள் நடத்த தடை எனினும் 50 பேருக்குட்பட்ட கூட்டங்கள்ஏனைய செயற்பாடுகள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டும் எனவும் அத்தோடு ஆலயங்கள் மற்றும் பொது இடங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இவ்வருட கச்சதீவு ஆலய உற்சவத்தினை சுகாதார அமைச்சின் அனுமதியுடன் அதனை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-03,33,101)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மரணித்த யாசகம் பெறுபவரின் பையில் இலட்சத்துக்கு மேற்பட்ட பணம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மரணித்த யாசகம் பெறுபவர் ஒருவரின் பையில் ஒரு இலட்சத்து முப்பதாயிரத்துக்கு மேல் பணம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் கடந்த மூன்று நாட்களாக கிசிச்சை பெற்று வந்த குறித்த நபர் நேற்று மரணமடைந்துள்ளார்.

அவர் கிளிநொச்சி நகர பிள்ளையார் ஆலயம், வங்கிகளுக்கு முன்னாள் நின்று தர்மம் பெற்று வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் மரணித்த பின்னர் அவர் வைத்திருந்து பழைய பைகளில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்க்கும் மேல் பணம் இருந்தமை வைத்தியசாலையால் கண்டறியப்பட்டுள்ளது. (ம-03,100,350)

# வைத்தியசாலைகளில் இருந்து கொரோனா கொத்தணிகள் உருவாகும் அபாயம்

## அரச தாதியர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை முழுவதும் உள்ள வைத்தியசாலைகளை அடிப்படையாக கொண்டு கொரோனா கொத்தணிகள் உருவாகும் அபாயம் எழுந்துள்ளதாக அரச தாதியர் சங்கம் எச்சரித்துள்ளது.

அது உண்மையில் நடந்தால் அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரியா தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, கம்பஹா வைத்தியசாலை, கண்டி வைத்தியசாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகள் இந்த சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். (ம-03)

# பருத்தித்துறை கொட்டடியில் குண்டு கண்டுபிடிப்பு



(கரணவாய்)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் இருந்து குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை மாலை அப்பகுதியில் குண்டு ஒன்று காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார், இராணுவத்தினர் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டனர்.

நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு குண்டு மீட்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.(ம-03,60)

## கரவெட்டியில் அனுமதி பெறாமல்

# வகுப்புக்கள் நடத்திய பாடசாலைக்கு சீல் வைப்பு

## அதிபர், ஆசிரியர் தனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றுக்கு நேற்று சீல் வைக்கப்பட்டது.

அனுமதி பெறாமல் தரம் 5 மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடத்தியதுடன் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது செயற்பட்டமை அறியப்பட்டதையடுத்தே கல்லூரிக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

இதனால் கல்லூரி அதிபர், கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியர் ஆகியோரும் நேற்றிலிருந்து எதிர்வரும் 20ஆம் திகதி வரை சுயதனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். (ம-03,18,60)

## புத்தாண்டுக் கொண்டாட்டம்

# கிராம அலுவலர் தனிமைப்படுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பொற்பதி கிராமத்தில் தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குடும்பத்தாரின் வீட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் கிராம அலுவலர் ஒருவர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து பொற்பதிக்கு திரும்பிய நான்கு குடும்பத்தினர் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களில் ஒரு குடும்பத்தாரின் வீட்டிலேயே குறித்த கொண்டாட்டத்தில் கிராம அலுவலர் பங்குகொண்டதாக தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு அவருடைய வீடு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ம-03)


கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை உடற்கல்வி பாட ஆசிரியை
திருமதி **கிருசாந்தினி கோபிநாத்** அவர்களின்
பாசமிகு தந்தையார்
அமரர்
கந்தையா சிவகுமாரன்
அவர்கள் 06.01.2021 அன்று இறைபதம்
அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை



கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. **செ. செல்வக்குமரன்** அவர்களின்
அன்புத் தாயார்
அமரர்
சர்வலோகநாயகி செல்லையா
அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின்
இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
தோற்றம் 1951.02.04
மறைவு 2021.01.06
ஆசிரியர் கழகம்,
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.



கண்ணீர் அஞ்சலி



யா//இருபாலை சி.சி.த.க பாடசாலை
அதிபர் திரு. **சோ. கஜேந்திரன்**
அவர்களின் தந்தையார்
அமரர்
தியாகராசா சோமசேகரம்
(ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
அவர்கள் 06.01.2021 அன்று
இறைபதம் அடைந்த செய்தி
அறிந்து நாமும் துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய் கோட்டம்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# பொதுப் போக்குவரத்தைத் தவிர்த்து பாடசாலைக்கு வருவதே நன்று

## கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன்

(யாழ்ப்பாணம்)

**பாடசாலை செல்லும் மாண வர்கள் பொதுப் போக்குவரத் தினை தவிருங்கள் என வடக்கு மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.**



எதிர்வரும் திங்கட்கிழமை வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பொதுப்போக்குவரத்துக்களைத் தவிர்த்து தமது பெற்றோரின் சொந்த வாகனங்களில் பாடசாலைக்குச் செல்வது சிறந்தது என அவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பாக எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க பாடசாலையின் வகுப்பறைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு சுகாதார அமைச்சினால் பாடசாலை மாணவர்களின் சுகாதார நலத்திட்டங்களை மேம்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிதியீட்டங்களின் மூலம் மாணவர்களின் சுகாதார நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு பாடசாலைகளை பொறுத்தவரையில் அகச் சூழலை பொறுத்தவரைக்கும் பாடசாலை வகுப்பறைகளில் இரண்டு கட்டங்களாக மாணவர்கள் பாடசாலைக்கு உள்வாங்கப்பட உள்ளார்கள்.

அத்தோடு பாடசாலையின் அகச்சூழலை பொறுத்தவரை சுகாதார நடைமுறைகளை பேணுவதற்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புறச்சூழலைப் பொறுத்தவரை அருகில் உள்ள கடைகள் மற்றும் போக்குவரத்து போன்ற இதரச் செயற்பாடுகளில் சில இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பொதுப் போக்குவரத்துகளை தவிர்த்து பெற்றோர்களின் சொந்த வாகனங்களில் வருவதன் மூலம் கொரோனாத் தொற்று ஏற்படுவதில் இருந்து மாணவர்கள் தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

நீண்ட நாட்களாக மூடப்பட்டுள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட உள்ளதால் பாடசாலைகளை சுத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றோம்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியுடனும் அந்தந்த பிரிவு படைப்பிரிவினர் உதவியையும் கோரியுள்ளோம்.

எனவே அவர்களின் உதவி மூலம் பாடசாலைகள் சுத்தம் செய்யப்பட்டு தொற்று நீக்கம் செய்யப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்கு வழமைபோல் அழைக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4-33)

# தற்போதைய பரிசோதனைகள் போதுமானது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலையில் பி.சி.ஆர். பரிசோதனை வடக்கு மாகாணத்திற்கு போதுமானதாகவுள்ளது. தேவையேற்படின் மாத்திரமே அன்டிஜன் பரிசோதனை வடபகுதியில் மேற்கொள்ளப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.



யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட கொரோனா தடுப்பு விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில்கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரு நாளைக்கு 600 க்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனவே தற்போதைய நிலையில் வட பகுதியில் அன்டிஜன் பரிசோதனை தேவையற்ற ஒன்று எனவும் தெரிவித்தார்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வரு வோருக்கு நாம் பி.சி.ஆர். சோதனைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-33)

# அரசியல் கைதிகள் என சிறையில் எவருமில்லை

## என்கிறார் நீதியமைச்சர்

(கொழும்பு)

அரசியல் கைதிகள் என எவருமே சிறைகளில் இல்லை, பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தமிழ் கைதிகள் சிலர் உள்ளனர். எனினும் எந்தவித வழக்கும் தொடராது நீண்ட காலமாக இவர்களுக்கு பிணை வழங்காது தடுத்து வைக்கவும் முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, வாய்மூல வினாக்கான விடை நேரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர் சுரேன் ராகவன் சபையில் கேள்வி எழுப்பியதற்கே நீதி அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும் இவர்களை விடுவிப்பது குறித்து அரசாங்கம் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டும், இன்னமும் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி-4)

# வெற்றியளித்துள்ள இஞ்சி, மஞ்சள் செய்கை

(நெளுக்குளம்)

வவுனியா புளியங்குளம் கல்மடு கிராமத்தில் வசிக்கும் த.தவராசா என்ற 67 வயதுடைய பார்வையிழந்த விவசாயி சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மேற்கொண்ட விவசாயம் வெற்றியளித்துள்ளது.

வடமாகாண விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இஞ்சி மற்றும் மஞ்சள் விதைகளைக் கொண்டு தனது காணியில் சுமார் ஒரு பரப்பில் செய்த செய்கையானது வெற்றியளித்துள்ள நிலையில் அறுவடைக்காக காத்திருக்கின்றார்.

நாட்டில் மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள சந்தை வாய்ப்பை கருத்தில் கொண்டு விவசாய திணைக்களத்தினை நாடிய இவர் அவர்களது ஆலோசனையின் பிரகாரம் மஞ்சளுடன் இஞ்சியையும் செய்கை பண்ணியிருந்தார்.

தனக்கு உதவியாளர் ஒருவரை பணிக்கு அமர்த்தி அவர் மூலமாக சில பயிர்காப்பு செயற்பாடுகளை மேற்கொண்ட தவராசா இன்று தனது நிலத்தில் பயிரிடப்பட்ட மஞ்சளும் இஞ்சியும் சிறப்பாக வளர்ந்து அறுவடைக்குத் தயாராக இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைந்துள்ளார்.

நேற்று வடமாகாண விவசாய திணைக்களத்தினால் அவரது விளை நிலத்தில் வயல் விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டு அறுவடைக்கான ஏற்பாடுகள் மற்றும் சந்தை வாய்ப்புகள் தொடர்பில் தெளிவூட்டல்கள் அவருக்கும் ஏனைய விவசாயிக்கும் வழாங்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் வட மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமாரன், வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் திருமதி அருந்ததி வேல்நாயகம், வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் ரி.தர்மேந்திரா, வவுனியா வடக்கு பிரதேச சபை தலைவர் எஸ்.தணிகாசலம் ஆகியோரும் வயல் விழாவில் கலந்து கொண்டனர். (நி-5-299)



# விளையாட்டு வீரர்களை தொழில் ரீதியான வீரர்களாகக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ



**நாட்டில் முதல் தடவையாக அனைத்து விளையாட்டுக் களிலும் ஈடுபடும் விளையாட்டு வீரர்களை தொழில் ரீதியான விளையாட்டு வீரர்களாகக் கட்டியெழுப்புவதற்காக ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கடந்த 4 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெற்ற விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்ட மட்டத்திலும் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

சகல விளையாட்டுத்திட்டங்களும் கிராமிய மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சகல தரப்பினருடனும் கலந்துரையாடி முன்னெடுக்கப்படும். இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

அரசியல் தகைமைகளுக்கு அப்பால் திறமைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும். இவற்றில் நவீன வசதிகளும் விளையாட்டு வீரர்களுக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பாடசாலைகளுக்கிடையில் விளையாட்டு போட்டிகளும் நடத்தப்படும்.

இதுவரை எமது நாட்டில் விளையாட்டுத் துறையின் பௌதிகவள அபிவிருத்திக்காகவே கூடுதல் நிதி செலவிடப்பட்டுள்ளது.


நாம் தற்பொழுது மனித வள அபிவிருத்திக்கே கூடுதல் நிதியினை செலவு செய்யவுள்ளோம்.

கடந்த காலங்களில் ஒரு விளையாட்டு மைதானம் பல தடவைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

சில விளையாட்டு மைதானங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இவற்றை பயன்பாட்டிற்கு ஏற்ப கட்டியெழுப்புவதற்காக பிரதேச வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்தார். (4)

# உலகின் வயதான முதல்தர கிரிக்கெட் வீரர் உயிரிழப்பு



உலகின் வயதான முதல் தர கிரிக்கெட் வீரரான ஆலன் புர்கெஸ், தனது 100 ஆவது வயதில் உறக்கத்திலிருந்த போது உயிரிழந்துள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

புர்கெஸின் மகள் பிப்பை, தனது தந்தை இறுதிவரை நல்ல நிலையில் இருந்ததாகவும் செவ்வாயன்று நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியை கிறிஸ்ட்சர்ச்சிலிருந்து தொலைக்காட்சியில் பார்த்ததாகவும் கூறினார்.

புர்கெஸ் 1920 மே மாதம் முதலாம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் பிறந்தார்.

வலது கை துடுப்பாட்டாளராகவும் இடது கை சுழற்பந்து வீச்சாளராகவும் இருந்த அவர், 1940/41 முதல் 1951/52 வரை இங்கிலாந்தின் கேன்டர்பரிக்காக 11 முதல் தர போட்டிகளில் விளையாடியுள்ளார்.

1945 ஆம் ஆண்டின் இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஆலன் புர்கெஸ் கிரிக்கெட் சேவைகளுக்காக நியூசிலாந்துக்கு திரும்பினார்.

புர்கெஸின் கிரிக்கெட் வாழ்க்கை 1940 இல் கிறிஸ்மஸ் தினத்தன்று தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஐ.பி.எல்.ஏலத்தை முன்னிட்டு சென்னை வீரர்கள் சிலர் வெளியேற்றம்

2021 ஐ.பி.எல்.தொடருக்கான ஏலம் எதிர்வரும் பெப்ரவரி 11 ஆம் திகதி நடக்கும் என்று கூறப்படுகிறது. இதற்கான டிரேடிங் விண்டோ தற்போது திறக்கப்பட்டுள்ளது.

டிரேடிங் விண்டோ என்பது ஒரு அணி தங்கள் அணியில் இருக்கும் வீரர்களை விடுவிப்பதாகும். இந்த வீரர்களை மற்ற அணிகள் விரும்பினால் ஏலத்தில் பெற முடியும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மட்டுமே டிரேடிங்விண்டோ திறக்கப்பட்டு இருக்கும். வீரர்களை வெளியேற்ற வேண்டும் என்றால் அதற்குள் வெளியேற்ற வேண்டும்.

அந்தவகையில் சென்னை அணியின் ஹர்பஜன் சிங், பியூஸ் சாவ்லா, கேதார் ஜாதவ் உள்ளிட்ட 4 வீரர்கள் முதல் கட்டமாக டிரேட் செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு வெளிநாட்டு வீரர்கள் இதேபோல் டிரேட் செய்யப்பட உள்ளனர். வெளியேற்றப்படும் 4-5 வீரர்களுக்கு இணையாக 5 வீரர்கள் வரை சி.எஸ்.கே.அணி ஏலத்தில் எடுக்கவுள்ளது.

இதனால் சி.எஸ்.கே. அணியில் பல புதிய வீரர்கள் விரைவில் தெரிவு செய்யப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. (4)

# ஜூனியர் ஹொக்கி சம்பியன்ஷிப்

## அமெரிக்கா தங்கப் பதக்கம்




2021 உலக ஜூனியர் ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க அணி கனடாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

கனடாவின் எட்மண்டனில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் கனடாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

டர்கோட் அலெக்ஸ், ஜெக்ராஸ் ட்ரெவர் ஆகியோர் அமெரிக்க அணி சார்பில் தலா ஒவ்வொரு கோல்களை அடித்தனர்.

ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில் அமெரிக்கா தங்கப் பதக்கம் வெல்வது இது ஐந்தாவது சந்தர்ப்பமாகும்.

2021 உலக ஜூனியர் ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்ற கனடா வெள்ளிப் பதக்கத்தையும் ரஷ்ய அணியை வீழ்த்தி பின்லாந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# பிக் பேஷ் இருபது-20

## ஸ்கொர்சர்ஸ் அணி வெற்றி



பிக் பேஷ் இருபது-20 தொடரின் 30 ஆவது லீக் போட்டியில், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி 86 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பெர்த் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் சிட்னி சிக்ஸர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிட்னி சிக்ஸர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 184 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் 97 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி 86 ஓட்டங்களால் அபார வெற்றியினை பதிவு செய்தது. (4)

## பயங்கரவாதிகளுடன் தொடர்பு பேணியதால் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தடுப்பில் உள்ளார்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகளுடன் தொடர்புகளைப் பேணிய குற்றத்திலேயே ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை தடுத்து விசாரித்து வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கேள்விநேரத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல "சட்டத்தரணிஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஒன்பது மாதங்களாக குற்றச்சாட்டுகள் இல்லாது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மிகச் சிறந்த சட்டத்தரணி என்பது எம் அனைவருக்கும் தெரியும். எனவே அவருக்கு பிணை வழங்க வேண்டும் என சபையில் கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்ட தற்கொலைக் குண்டுதாரிகளுடன் மூன்று தடவைகள் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்ற நபர் உரையாடியுள்ளார்.

அவர்ஒருஎகிதியபெண்ணை திருமணம் செய்துள்ளார். அந்த பெண்ணும் பயங்கரவாத குழுவுடன் தொடர்புபட்டவர். அவர் "பேல் ஒப் யுநிட்டி" என்ற அமைப்பின் பெயரில் பாடசாலை ஒன்றை நடத்தியுள்ளார்.

அதற்கு சஹ்ரானும் போதனைகளை நடத்தியுள்ளார். இந்த அமைப்பிற்கு கட்டார் சரிட்டி எனும் நிறுவனத்தின் மூலமாக நிதி உதவிகள் கிடைத்துள்ளன.

இந்த கட்டார் சரிட்டி என்பது ஐக்கிய நாடுகள் சபையினால் தடை செய்யப்பட்ட நிறுவனமாகும்.

இந்தச் சாட்சிகளுக்கு அமையவே அவரை தடுத்து வைத்துள்ளோம். இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஒருவர் பற்றி நீங்கள் பேச வேண்டாம் என வீரசேகர தெரிவித்தார். (நி-4)

# ஒன்றுபட்டு உறவுகளை மீட்போம்

## சர்வமதத் தலைவர்களிடம் கைதிகளின் உறவுகள் கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**கொரோனாத் தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என கைதிகளின் உறவினர்கள் சர்வமத தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.**



"ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம்" எனும் தொனிப் பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.



சிறை இருட்டில் இருக்கும் எமது உறவுகளை தற்கால கொரோனா வைரஸ் தொற்றும் வெகுவாக பாதித்துவரும் நிலையில் கருணை அடிப்படையில் மனிதாபிமான இத்தருணத்திலாவது அவர்களை விடுவிக்க வேண்டுமெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. அத்தோடு அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## தற்காலிகமாக மூடப்பட்டது இலங்கைத் தூதரகம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலைகள் காரணமாக ஜனவரி 10 ஆம் திகதி வரை வோஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகம் மூடப்பட்டுள்ளது.

அதனால் அவசர தேவை களுக்காக பின்வரும் முறையினூடாக தொடர்பு கொள்ளுமாறு தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவசர சேவைகளுக்கு: **slembassy@slembassyusa.org**

தூதரக விடயங்கள் : **consularofficer@slembassyusa.org** (மின்னஞ்சல்) தூதரக தொலைபேசி எண் : (202) 580 9546. (நி-4)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். தியாகராசா சோமசேகரம்

(SLPS-I, ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரி வர்காவற்றுறை)



எமது பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திரு.சோமசேகரம் கஜேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தை **அமரர்.தியாகராசா சோமசேகரம்** அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறையருளையும் வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.

(சி-1108)



# கண்ணீர் அஞ்சலி



அமரர்.

தியாகராசா சோமசேகரம்

(SLPS-I MAT.TR)

எமது பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் **அமரர் தியாகராசா சோமசேகரம்** அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறையருளையும் வேண்டுகின்றோம்.

(5208)

யா/ கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலை,
பாடசாலைச் சமூகம், இருபாலை, கோப்பாய்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.திரு.வல்லி கந்தசாமி

(ஓய்வுபெற்ற பிரதேச சபை ஊழியர்,மருதங்கேணி)

கடந்த 10.12.2020 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் **அமரர் திரு.வல்லி கந்தசாமி** (ஓய்வுபெற்ற பிரதேச சபை ஊழியர் மருதங்கேணி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.01.2021 நாளை சனிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் "பருத்தித்துறை தாமரைக்குளம் அந்தியேட்டி மடத்தில்" (ஹாட்லிக் கல்லூரிக்கு அருகாமையில்) நடைபெறும்.



மாதா கோவிலடி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.

(C-1107)

தகவல்:
குடும்பத்தினர்.

# மக்களின் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும்

(சாவகச்சேரி)

அரசியல்வாதிகள் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாக இருக்க வேண்டுமே தவிர தனி ஒருவரின் விளம்பரத்திற்காக செயற்படக்கூடாது என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அபிவிருத்திக்கு தடையானவர்கள் அல்ல. ஆனால் உரியவர்களுக்கான கௌரவம் மற்றும் மதிப்பு வழங்கப்பட்டு அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அபிவிருத்தி தனி ஒருவருக்குச் சொந்தமானது அல்ல. பிரதேச சபையின் கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும். எதிர்காலத்தில் ஒவ்வொருவரையும் அணுகி பிரதேச அபிவிருத்தி தொடர்பில் கலந்தாலோசிக்கவுள்ளேன்.

மக்கள் எம்மை எந்த நோக்கத்திற்காக தெரிவு செய்தனரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவோம்.

மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாக, தனி ஒருவரின் விளம்பரத்திற்காக அன்றி பொது நோக்கோடு அனைவரும் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# இணையவழி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 பரவலின் தாக்கத்தினால் வர்த்தகர்கள் மற்றும் சிறுகைத்தொழிலாளர்கள் பொருளாதார ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான இணையவழிக் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும்.

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5மணி வரை யாழ்.வணிகர் கழக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஆர்வமுள்ள வர்த்தகர்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)



இளவாலை வருதப்பட்டாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் டாக்டர்- ஜெயசுந்தரத்தின் இரண்டாம் ஆண்டு நினைவாக அண்மையில் அவரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் நீர்வேலியில் பத்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (படம்:- ரவிசாந்)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள சங்கக்கட்டடத்தில் இடம்பெறவுள்ளது என வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

எனவே அங்கத்தவர்கள் அனைவரும் இவ்வாண்டுக்கான சந்தாப்பணத்தினை செலுத்தி கூட்டத்தில் கலந்துகொண்டு புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்ய ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (5-4)



யாழ்.மாநகர சபை மேயராகப் பதவியேற்ற சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளராகப் பதவியேற்ற பத்மநாதன் மயூரன் ஆகியோருக்கு கடந்த சனிக்கிழமை கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மண்டபத்தில் பாராட்டுவிழா இடம்பெற்றது.

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த மோட்டார் சைக்கிள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் இரண்டுமாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.(5)

# போலியான தொலைபேசி அழைப்புக்களை நம்ப வேண்டாம் - பிரதேச செயலாளர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் இனம்தெரியாத நபர் ஒருவரினால் பொதுமக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவது தொடர்பில் போலியான தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வாரத்தில் குறித்த ஒரு நபரினால் எமது கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளப்பட்டு வீட்டுத்திட்டம் வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு இது தொடர்பில் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொலைபேசி மூலமான பணப் பரிமாற்றல் மூலம் குறித்த தொகையினை அனுப்புமாறும் அதன் பின் வீட்டுத்திட்டத்திற்கான பணம் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டுத்திட்டம் வழங்குவது தொடர்பில் எதுவித பணமும் மக்களிடம் இருந்து அறவிடப்படுவதில்லை என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருவதுடன் வீட்டுத்திட்டமானது அரசினால் வழங்கப்படும் உதவியாகும். இது தனிநபர்களினால் வழங்கப்படுவதில்லை. வீட்டுத்திட்டம் தொடர்பான வேலைகளில் கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மட்டுமே தொடர்புபட்டவர்கள் ஆவார்கள் எனவும் தெரிவித்தார்.

எனவே பொதுமக்கள் மோசடிக்காரர்களிடம் சிக்கி பணத்தை இழக்க வேண்டாம் எனவும் மோசடி பற்றிய தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் இவ்வாறான தொலைபேசி அழைப்பில் கூடிய கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (5)

# அனர்த்த முகாமைத்துவ நிதியை சாவகச்சேரிக்கு பயன்படுத்த இணக்கம்

(சாவகச்சேரி)

2021 ஆம் ஆண்டின் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிதியை சாவகச்சேரி பிரதேசத்திற்கு பயன்படுத்த இணக்கம் ஏற்பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் மழை வெள்ளம் காரணமாக தென்மராட்சியின் பல பகுதிகள் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக கொடிகாமம், கைதடி-நுணாவில், சரசாலை, வரணி மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்கள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அண்மையில் யாழ்.மாவட்ட அரச அதிபர் மட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தோம்.

பல திணைக்கள தலைவர்கள் கலந்துகொண்ட குறித்த கூட்டத்தில் கொடிகாமம்-நாவலடி பகுதியை நேரடியாக வந்து பார்வையிட்டு அங்கு வருடா வருடம் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தேன்.

எனது கோரிக்கைக்கு இணங்க புகையிரதத் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் அரச அதிபருடன் நேரடியாக வந்து கொடிகாமம் நாவலடிப் பகுதியைப் பார்வையிட்டனர்.

இதன்போது புகையிரதத் திணைக்களம் கொடிகாமம்-நாவலடிப் பகுதியில் ரயில் பாதையை அண்மித்து உள்ள பாலத்தை ஆழமாக்கி வெள்ளத்தைக் கடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஏ-9 வீதியில் இருந்து கொடிகாமம் வீதி வரை 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வெள்ள வாய்க்கால் அமைக்கும் திட்ட முன்மொழிவு ஒன்றும் சமர்பிக்கப்பட்டது.

இவ்வாண்டிற்கான மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிதியை சாவகச்சேரியில் இயற்கை அனர்த்தங்களால் வெகுவாகப் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு பயன்படுத்த கொள்கை ரீதியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வருடம் தென்மராட்சியின் பல பாகங்களிலும் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என நம்புகிறேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-4-30)




ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் மேற்கொண்டு வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஜீவன் மருந்தகத்தின் நிதிப்பங்களிப்புடன் அச்சிடப்பட்ட 500 கோவை அட்டைகள் கடந்த சனிக்கிழமை உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டது. (படம்:- ரவிசாந்)


# கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பில்

# ஜெய்சங்கர்-டக்ளஸ் சந்திப்பு

## சுமுகமான தீர்வு கிடைக்குமென நம்பிக்கை வெளியீடு

(கொழும்பு)

**இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**



இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிகார அமைச்சருக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே குறித்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய கடற்றொழிலாளர்களையும், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களையும் விடுதலை செய்து சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அதேபோன்று 2018 ஆம் ஆண்டு புதிய மீன்பிடி தொடர்பான சட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் கைப்பற்றப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் பழுதடைந்த நிலையில் கைவிடப்பட்டுள்ளவற்றை விற்பனை செய்து இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் கருத்துக்கள் இதன்போது பரிமாறப்பட்டன.

அதேவேளை இந்தியக் கடற்றொழிலாளர்களினால் எல்லை தாண்டி வந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ரோலர் முறை எனப்படும் இழுவை வலை படகுத் தொழிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள குறித்த தொழில் முறையினால் இரண்டு நாடுகளின் கடல் வளத்திற்கும் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பாகவும் இந்திய வெளியுறவு அமைச்சருக்குத் தெளிவுபடுத் தப்பட்டது.

அத்துடன் அரபிக் கடலுக்குச் செல்லுகின்ற இலங்கையின் ஆழ்கடல் பல நாள் கடற்றொழிலாளர்களுக்கான குறுகிய தூரத்தினை கொண்ட மாற்று வழியாக இந்தியாவிற்கும் மாலைதீவிற்கும் இடையிலான இந்தியக் கடற்பரப்பைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் போன்ற கருத்துக் களை கடற்றொழில் அமைச்சர் முன்வைத்தார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் குறித்த விடயம் தொடர்பாகத் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சுமுகமான தீர்வினை காண்பதற்கு உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## விமான சேவைகளை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்காக எதிர்வரும் வாரம் முதல் விமான சேவைகளை அதிகரிக்கவுள்ளதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர், பணம் செலுத்தி தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை எனவும் வருகை தரும் அனைவருக்கும் அரசாங்கத்தினால் தனிமைப்படுத்தல் வசதி ஏற்படுத்தி தரப்படும் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


## மணமகள் தேவை

மிகவும் உயர் பதவியிலுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 9 இல் செவ்வாய் சிம்மராசி மணமகனுக்கு பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை.

தொடர்பு- 077 397 1841
077 891 3745

(5191)


## சுகாதார வழிகாட்டல்கள் வெளியீடு

(கொழும்பு)

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் கடைப்பிடிக்க வேண்டிய கொவிட் 19 வழிகாட்டுதல்களின் பட்டியலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்த்தன வெளியிட்டுள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வணிக விமானங்களுக்கான விமான நிலையங்களை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளது. (நி-4)

## 183 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

உக்ரேய்ன் நாட்டில் இருந்து சுற்றுலா பயணிகளுடனான விமானம் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த விமானத்தில் 183 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டிற்குள் அழைத்துவரப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 180 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரேய்னிய பயணிகள் விமானம் டிசம்பர் 28 ஆம் திகதி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அவர்களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சிக்கின போதை மாத்திரைகள்

(கொழும்பு)

பெல்ஜியம் நாட்டில் இருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட 9 கிலோ நிறையுடைய 18,000 போதை மாத்திரைகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தென் ஆசியாவிலேயே இதுவரையில் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான போதை மாத்திரை தொகை இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த போதை மாத்திரைகள் 13.5 கோடி ரூபாய பெறுமதியுடையவை.

மத்திய தபால் பரிமாற்றத்திற்கு கிடைக்கப்பெற்ற பொதி ஒன்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சடலமாக மீட்கப்பட்ட வியாபாரிக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

தம்புள்ளையில் உள்ள விடுதியில் நேற்று முன்தினம் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இரத்தினக்கல் வியாபாரிக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, தம்புள்ளை பொலிஸ் பிரிவினர், தம்புள்ளை மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் விடுதியின் உரிமையாளர்கள் என அனைவரும் தற்பொழுது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

## ஈ.ரி.ஐ., சுவர்ணமஹால் பணிப்பாளர்கள் நால்வருக்கும் பிணை

(கொழும்பு)

நிதி முறைகேடுகள் தொடர்பில் ஈ.ரி.ஐ. மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக செயற்பட்ட நான்கு பேர் சி.ஐ.டியின் சிறப்புக் குழுவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களை தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணைகளில் விடுவிக்க கோட்டை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா, பொலிஸ் மா அதிபருக்கும், சி.ஐ.டி எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் வழங்கிய விஷேட ஆலோசனைகளுக்கு அமைய இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.ரி.ஐ. மற்றும் சுவர்ணமஹால் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக செயற்பட்ட ஜீவக எதிரிசிங்க, அஞ்சலி தீபா எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

13.7 மில்லியன் பணத்தை சட்டவிரோதமாக பெற்றுக் கொண்டமை உள்ளிட்ட நிதி முறைகேடு தொடர்பிலேயே இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (நி-4)

## போலித்தகவல் வழங்கியவர் வசமாக மாட்டினார்

(கொழும்பு)

பொலிஸ் அவசர இலக்கமான 119 ஐ அழைத்து தவறான தகவல் வழங்கிய ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தெஹிவளை, கல்தெர கார்டனில் வசிக்கும் 40 வயதானவரே கைதாகினார்.

குறித்த நபர் கடந்த 5 ஆம் திகதி தன்னுடைய தொலைபேசியிலிருந்த பொலிஸ் அவசர அழைப்பை ஏற்படுத்தி கண்டியில் ஒரு சம்பவம் நடப்பதாக போலியான தகவல் வழங்கியதை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

# உதவிகளை வழங்க முன் வாருங்கள்

(நெளுக்குளம்)

வவுனியா பட்டாணிச்சூரில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அக் கிராமம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் மக்களுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வவுனியா நகரசபையின் உறுப்பினர்களான அப்துல் பாரி மற்றும் லரீப் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.


தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், எமது கிராமம் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்டது.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அங்குள்ள 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த 4500 இற்கும் மேற்பட்டவர்கள் தற்போது உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியாதுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

எனவே இவர்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுக்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குழந்தைகளுக்கு பால்மா மற்றும் வயோதிபர்களுக்கான உணவு, மருந்துவம் என்பன பெரும் பாதிப்பாக உள்ளது. எனவே தனிமைப்படுத்தப்பட்ட மக்களை மனிதாபிமானத்தோடு நோக்குங்கள் என தெரிவித்துள்ளனர். (5-299)

# பாலத்தினை சீர்செய்யக் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தின் சேதமடைந்துள்ள பாலத்தினை விரைவாகப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளம் வீதியில் மண்டைக் கல்லாறுக்கு மேலாக அமைக்கப்பட்டிருந்த பாலம் ஒரு வருடத்திற்கு முன்னர் சேதமடைந்தது.

கிராமமக்களும் இராணுவத்தினரும் இணைந்து தற்காலிகமாக புனரமைத்த குறித்த பாலத்தின் ஊடாக தற்போது போக்குவரத்து நடைபெறுகிறது.

எனினும் இப்பாலம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடியநிலையில் காணப்படுகின்றது.

நெல் அறுவடைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் சுமைகளுடன் வாகனங்கள் இப் பாலத்தினூடாக போக்குவரத்தில் ஈடுபடுவது சிரமத்தை ஏற்படுத்தக் கூடும்.

எனவே குறித்த இப் பாலத்தினைப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# வீதியில் புதைந்த டிப்பர் வாகனம்



(நெளுக்குளம்)

வவுனியா சாந்தசோலை இரண்டாம் குறுக்கு தெரு வீதியில் நேற்று முன்தினம் டிப்பர் வாகனம் ஒன்று அதிகூடிய பாரம் காரணமாக புதையுண்டது.

சாந்தசோலை இரண்டாம் குறுக்குத் தெரு கடந்த வருடம் கிரவல் நிரவப்பட்டு பாதை புனரமைப்பு செய்யப்பட்டது.

எனினும் அண்மையில் பெய்த மழை மற்றும் கனரக வாகனத்தின் கூடிய பாரம் காரணமாக வீதியில் அமைக்கப்பட்ட மதகுக்கு மேல் பயணித்த டிப்பர் தாழ் இறங்கியது.

இவ்வாறு புதையுண்ட டிப்பர் சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்னர் ஜே.சி.பியின் உதவியுடன் மீட்கப்பட்டது. இதனால் அவ் வீதியுடனான போக்குவரத்தும் தடைப்பட்டது. (5-299)

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் சந்தைக் கட்டடம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினால் சுமார் 37 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதி செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட முரசுமோட்டை பொதுச்சந்தை செயலிழந்து காணப்படுவதுடன் கால் நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள முரசுமோட்டை பொதுச்சந்தை மீள் குடியமர்வின் பின்னர் சுமார் 37 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அதற்கான மலசலகூடம், குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாமை,பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த சந்தையானது கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன்தற்போது கால்நடைகளின் உறை விடமாக காணப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் வட பகுதி சந்தைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. அவை மீண்டும் திறக்கப்படும் வேளையில் இப் பொதுச் சந்தையும் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களும் வியாபாரிகளும் கோரிக்கை முன் வைக்கின்றனர். (5-315)

# 35 மில்லியன் ரூபாய் செலவில் ஆயுர்வேத வைத்தியசாலை

(முறிகண்டி)

கிளிநொச்சியில் 35 மில்லியன் ரூபாய் செலவில் விடுதி வசதிகளுடன் கூடிய விசேட கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது. இவ் வைத்தியசாலையானது கிளிநொச்சி நகரில் கூட்டுறவு மண்டபத்திற்கு அருகில் ஏ9 வீதியோடு மாவட்ட பயிற்சிவள நிலையம்அமைந்துள்ள வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது.

இக் காணியை மாவட்ட செயலகம் வழங்கியுள்ளது.

எனவே அடுத்த கட்ட பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (5-4-100-350)

# விவசாய அழிவுகளை பதிவு செய்யவும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமது அழிவு விபரங்களை உரிய கமநலசேவை நிலையங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு காலபோகச் செய்கை மேற்கொண்டுள்ள நிலையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அனர்த்தங்களால் குறிப்பிட்ட சில பகுதிகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அண்மையில் வீசிய புரேவிப்புயல் மற்றும் காலநிலை காரணமாக 1025 ஏக்கர் வரையான நெற்செய்கையும் 400 ஏக்கர் வரையான மேட்டு நிலப்பயிர்களும் அழிவடைந்தன.

இவ்வாறான அழிவுகளை எதிர்கொண்டுள்ள விவசாயிகள் தமது பகுதி கமநலசேவை நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(5-4-315)

# காலநிலைக்கு சீரமைவான உப உணவு செய்கை முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலநிலைக்கு சீரமைவான விவசாய செயற்றிட்டங்களினூடாக ஸ்கந்தபுரம்,வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் உப உணவுச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி மாகாண விவசாய திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உபஉணவுச்செய்கைகளை ஊக்குவிப்பதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் காலநிலைக்கு சீரமைவாக நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் மூலம் ஸ்கந்தபுரம் விவசாய போதனாசிரியர், பிரிவு வன்னேரிக்குளம் விவசாய போதனாசிரியர் பிரிவு, ஜெயபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 400 கிலோ உழுந்து, 505 கிலோ பயறு, 500 கிலோ கௌபி, 4740 கிலோ நிலக்கடலை, 65 கிலோ சோளம் என்பன வழங்கப்பட்டு பயிர்ச் செய்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-315)

# இராசிபலன்

08.01.2021
மார்கழி 24, வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 8.30 மணிவரை
சுவாதி பிற்பகல் 1.17 மணி வரை
சுபநேரம் -6.32-8.02 மணிவரை
இராகுகாலம் -11.02-12.32 மணிவரை
சந்திராஷ்டமம்:-ரேவதி, அச்சுவினி.

வளவன்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன் தொடர்பான பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.


மிதுனம்

பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலன் காண்பீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும்.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் மீதான பாசம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


சிம்மம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


துலாம்

தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், பயணத்தால் பலனுண்டு, வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.


விருச்சிகம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.


மகரம்

ஆடம்பரப் பொருட்கள் மீது ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெறுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.


கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.


மீனம்

வரவும், செலவும் சமமாகும் நாள், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, எதிர்பாராத வகையில் உறவினர், நண்பர்களிடையே சிறு முரண்பாடுகள் ஏற்படலாம்.

வைத்திருப்பதைவிட வாய்ப்புக்கு மதிப்பு அதிகம்

# நாட்டை முழுமையாக முடக்க வேண்டும்

## வைத்தியர் ஜயந்த பண்டார

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனா பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான ஒரே தீர்வு முழு நாட்டையும் ஒரு மாத காலத்திற்கு தனிமைப்படுத்துவதே என்று இலவச சுகாதார சேவைக்கான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.**




இதன்படி , கொரோனா வைரஸ் பரவுவதை தற்போதைய முறையில் முழுமையாக கட்டுப்படுத்த முடியாது என்று அதன் பொதுச் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்தார்.

மேலும், இலங்கையை கட்டாயம் முழுமையாக முடக்க வேண்டும என்ற கருத்தும் கூறப்பட்டது.

அத்துடன், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த வைரஸ் அழிக்கப்பட வேண்டும் எனவும், குறித்த அந்தக் காலம் இரண்டு அல்லது நான்கு வாரங்களாக என்று தீர்மானித்த பின்னர் முழு நாடும் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனா மரணங்கள் பதிவாகி வருகின்றதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்த இ.தொ.கா



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நல்லெண்ண அடிப்படையில் இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

மலையகத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக இதன் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்களான இராஜாங்க அமைச்சரும் இ.தொ.கவின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.கவின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச்செயலாளருமான செந்தில் தொண்டமான் மற்றும் இ.தொ.கவின் நிதிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ்வரன் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

இதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனாவால் உயிரிழப்போரை தகனம் செய்யுமாறு நிபுணர் குழு பரிந்துரை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போரின் சடலங்களை தகனம் செய்ய வேண்டும் என நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதா? அல்லது தகனம் செய்வதா? என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், குறித்த அறிக்கை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றும் போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


மேலும் இந்தப் பரிந்துரையானது எந்தவொரு மத அல்லது ஏனைய காரணங்களுக்காக மாற்றப்படாமல் செயற்படுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




அதேநேரம் அந்த அறிக்கை பிரதான குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# ஜோ பிடனின் வெற்றியை ஏற்க மறுத்த ட்ரம்ப் ஆதரவாளர்கள்

## ✦ பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டம்
## ✦ நால்வர் உயிரிழப்பு; 52 பேர் கைது





**(வோஷிங்டன்)**

**அமெரிக்க பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு டொனால்ட் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இதனையடுத்து கட்டடத்தினுள் நுழைந்தவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜோ பிடன் வெற்றி பெற்றாலும் அதனை ட்ரம்பும் அவரது ஆதரவாளர்களும் ஏற்க மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஜோ பிடனின் வெற்றியை உறுதி செய்வதற்காக அமெரிக்க பாராளுமன்றத்தின் கூட்டம் நடைபெற்றது. இதன்போது செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் அவை யில் இருந்தனர்.

அதேநேரத்தில், ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் பாராளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஜோ பிடனின் வெற்றியை ஏற்க முடியாது என அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

ஆயிரக்கணக்கான ட்ரம்பின் ஆதரவாளர்கள் கட்டடத்துக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டமையினால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்றக் கட்டடத்தின் மேல் பகுதியில் துப்பாக்கிகளுடன் அதிரடிப்படை வீரர்கள் குவிக்கப்பட்டனர்.

இதேவேளை, வெள்ளை மாளிகையில் ஊடகங்களைச் சந்தித்த ட்ரம்ப் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளதாகவும் முடிவுகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, எதிர்பாராதவிதமாக பாராளுமன்றத்தின் வெளியே கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் திடீரென பாராளுமன்றத்திற்குள் நுழைந்தனர்.

இதனால் அவை நடவடிக்கை பாதிக்கப்பட்டதுடன், துணை ஜனாதிபதி பென்ஸ், சபாநாயகர் நான்சி பெலோசி உள்ளிட்டோரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அத்தோடு, பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் ட்ரம்ப் ஆதரவாளர்களை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், பாதுகாப்பு படையினருக்கும் ட்ரம்ப் ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த நிலையில், ட்ரம்ப் ஆதரவாளர்கள் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் உயிரிழந்த நிலையில் அங்கு பதற்றம் நிலவியது.

இச்சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் போராட்டக்காரர்கள் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டதையடுத்து, பாராளுமன்ற கட்டட முற்றுகை போராட்டம் தற்போது கட்டுக்குள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அண்டை நாடான கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் உள்ளிட்ட பல உலக நாடுகளின் தலைவர்கள் இதனை ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வன்முறையாளர்களை உற்சாகப்படுத்திய ட்ரம்பின் ஐ லவ் யூ வீடியோ

## முடக்கப்பட்டது பேஸ்புக், டுவிட்டர்

(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளுமன்ற கட்டடத்துக்குள் புகுந்து ஜனாதிபதி ட்ரம்ப் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலை அடுத்து ட்ரம்ப்பின் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் கணக்குகள் தற்காலிகமாக முடக்கப்பட்டன.

யூடிப்பும் அவரது வீடியோவை தனது பக்கத்தில் இருந்து நீக்கியது.

பாராளுமன்றக் கட்டத் தொகுதிக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய தனது ஆதரவாளர்களை கலைந்து செல்லுமாறு கோரி ட்ரம்ப் தனது பேஸ்புக், டுவிட்டர் மற்றும் யூடிப்பில் வீடியோக்களை வெளியிட்டார்.

எனினும் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார்.

அத்துடன், கலவரத்தில் ஈடுபட்ட தனது ஆதரவாளர்களுக்கு தனது அன்பை வெளிப்படுத்தும் வகையில் "ஐ லவ் யூ" என்று ட்ரம்ப் அந்த வீடியோ பதிவில் கூறியிருந்தார்.

இந்நிலையில் இந்தப் பதிவுகள் வன்முறையாளர்களை மேலும் உற்சாகமாக்கும் எனக் கூறி பேஸ்புக், டுவிட்டர் மற்றும் யூடியூப் நிறுவனங்கள் அவரது அந்தப் பதிவை நீக்கின. அத்துடன், ட்ரம்ப் தொடர்ந்து பதிவிட முடியாத வகையில் அவரது கணக்குகளையும் பேஸ்புக், டுவிட்டர் நிறுவனங்கள் தற்காலிகமாக முடக்கின.

எங்கள் கொள்கைகளை மீறியதாலேயே ட்ரம்பின் டுவிட்கள் அகற்றப்பட்டன. அத்துடன் அவரது கணக்கு தற்காலிகமாக முடக்கப்பட்டது. ஆனால் அவரது கணக்கு பாதுகாப்பாக தொடர்ந்து பேணப்பட்டு மீண்டும் கையளிக்கப்படும் எனவும் டுவிட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வன்முறைகள் தொடர்ந்து அதிகரிக்காமல் தடுக்கும் நோக்குடனேயே ட்ரம்பின் கணக்குகளை தற்காலிகமாக முடக்கியதாக பேஸ்புக் தெரிவித்துள்ளது. (நி-4)




**மின்சாரத்தால் இயங்கும் 1.5 கி.மீ நீள உலகின் முதல் இரட்டை அடுக்கு பெட்டக ரயில் போக்குவரத்தை பிரதமர் மோடி கொடியசைத்து தொடக்கி வைத்தார்.**

# பொங்கல் பண்டிகையை வரவேற்க தயாராகும் கிராமங்கள்

(சென்னை)

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 14 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கரும்பு, தேங்காய், பலாப்பழம், வாழைப்பழம் உள்ளிட்ட பொங்கல் பண்டிகை சம்பந்தமான பொருட்கள் விற்பனை புதுக்கோட்டை மாவட்டத்தில் களை கட்ட தொடங்கியுள்ளது.

வடகாடு, மாங்காடு, புளிச்சங்காடு கைகாட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் பலாப்பழம் அறுவடை செய்யப்பட்டு பொங்கல் பண்டிகைக்காக விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பலாப்பழ விற்பனையும் களைகட்டியுள்ளது. ஒரு சில பகுதியில் கரும்புகள் அறுவடை செய்யும் பணி தொடங்கியுள்ளது. (நி-4)

# தென்னாபிரிக்காவில் பரவும் புதிய கொரோனா தடுப்பூசித் திறனைப் பாதிக்கும்

(கேப் டவுன்)

தென்னாபிரிக்காவில் பரவி வரும் திரிபடைந்த புதிய கொரோனா வைரஸ் முன்னர் பரவியதை விட வேமாகப் பரவக் கூடியது மட்டுமன்றி, கொவிட்-19 தடுப்பூசிகளின் செயல்திறனையும் பாதிக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் புதிய திரிவு கொரோனா தடுப்பூசியின் திறனில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தும் என்றே கருதுகிறோம் என குவாசுலு-நடால் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் துலியோ டி ஒலிவேரா கூறினார்.

SARS-CoV-2 இனத்தைச் சேர்ந்த 501Y.V2 எனப் பெயரிடப்பட்டுள்ள புதிய திரிபு வைரஸ் குறித்துப் புரிந்து கொள்ள தென்னாபிரிக்காவில் இடம்பெறும் ஆய்வுகளை பேராசிரியர் துலியோ டி ஒலிவேரா வழிநடத்தி வருகிறார்.

எனினும் சந்தையில் தற்போது கிடைக்கும் தடுப்பூசிகளில் சில வகை புதிய வகை வைரஸில் இருந்தும் பாதுகாப்பளிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என பேராசிரியர் துலியோ டி ஒலிவேரா கூறினார். (நி-4)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவு வழங்கும்

# உலகையே ஆக்கிரமித்து வருகின்ற கொரோனா வைரஸ் ஓர் உயிரியல் யுத்தமா?

உலகினை திகிலிற்கும், வியப்பிற்கும் உள்ளாக்கி, அதன் பெயரைக் கேட்டாலே எல்லோரும் பதறுவது மட்டுமல்லாமல் ஒருவரையொருவர் சந்தேகமாய்ப் பார்த்துத் தலைதெறிக்க ஓடுவதற்கும், உலகத்தின் சமூக பொருளாதார நோக்குகள் ஸ்தம்பித்து நிற்பதற்கும் காரணமான உயிருள்ளவற்றிற்கும் உயிரற்றவற்றிற்கும் இடையிலான தனக்கென உரித்தான சிறப்பியல்பினைக் கொண்ட வைரஸ்க்களின் கூட்டத்தில் அடங்கும் கொடிய கொரோனா வைரஸ் மற்றும் அதன் தீவிர நோய்ப்பரவல் தொடர்பாக விஞ்ஞானிகள் இன்று வரை கற்றுக் கொண்ட விடயங்கள் துல்லியமாக இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் வுஹான் என்னும் நகரில் முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட கொரோனா வைரஸானது, கடந்த டிசெம்பர் மாதத்தில் அந்தாட்டிக்கா தவிர மற்றைய அனைத்து கண்டங்களிலும் பரவியுள்ளது. இவ்வைரஸ் தொற்றினால் உலகளவில் பல இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ நூறாயிரக்கணக்கானவர்கள் இறந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. கடந்த மார்ச் மாதம் அளவில் இக் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலானது பாரிய சர்வதேச பரவலென உலக சுகாதார ஸ்தாபனத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இன்று வரை எத்தனை மக்கள் இலேசான தொற்றுக்களுடன் இருக்கலாம்? மற்றும் அவர்கள் இவ் வைரஸினை கடத்த முடியுமா? என்பன உட்பட இவ் வைரஸ் தொடர்பான அதிகளவு தெரியாத பல விடயங்கள் ஆச்சரியத்தை உண்டாக்கிய வண்ணமே இருந்து வருகின்றன.


இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் 2021 ஆம் ஆண்டு தைமாதம் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட கொவிட்-19 சூழ்நிலை அறிக்கையின் படி உலகளாவிய மற்றும் நாடளாவிய ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கையானது முறையே 85,099,466 ஆகவும் 45,242 ஆகவும் காணப்படுவதுடன் இவற்றுள் உலகளாவிய மற்றும் நாடளாவிய ரீதியாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது முறையே 1,845,726 ஆகவும் 215 ஆகவும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொரோனா வைரஸ் என்றால் என்ன?**

கொரோனா வைரஸ் ஆனது RNA வைரஸுடன் தொடர்புடைய ஒரு வைரஸ் கூட்டமாகும். கொரோனா என்றால் லத்தீன் மொழியில் மகுடம் (கிரீடம்) என்று பொருள்படும். பந்து வடிவில் இருக்கும் கொரோனா வைரஸ்க்கள் மீது குறிப்பிட்ட புரதங்களாலான கொம்புகள் உள்ளன. இவை நுணுக்குக் காட்டி வழியில் பார்க்கும் போது மன்னர்கள் சூடிக்கொள்ளும் மகுடத்தை போன்ற தோற்றத்தைத் தருவதுடன், இப் புரத முனைகளைக் கொண்டே விலங்குகள் மற்றும் மனிதக் கலங்களை ஊடுருவி உள்நுழைகின்றன. இவ் வைரஸ் குடும்பத்தில் மனிதர்களை தாக்கும் வைரஸ், பறவைகளைத் தாக்கும் வைரஸ் மற்றும் விலங்குகளை தாக்கும் வைரஸ் என பற்பல இனப்பிரிவுகள் உண்டு.

பொதுவாக சில வகையாக வைரஸ்க்கள் நேரடியாக மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவுகின்றன. சில







வைரஸ்க்கள் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு வந்து பின் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பரவுகின்றன. சில நேரங்களில் விலங்குகளைத் தாக்கக்கூடிய வைரஸ்க்கள் சடுதியான மாற்றங்களினால் ஏற்படும் விகாரத்தின் மூலம் மனிதர்களை தாக்குபவையாக பரிணமித்து மனிதர்களை தாக்குகின்றன. அந்த வகையில், கொரோனா வைரஸ்க்கள் ஆரம்பத்தில் வௌவால்களைத் தாக்கி வந்ததாகவும், இவ் வைரஸ்க்களில் ஏற்பட்ட சடுதி மாற்ற விகாரங்களின் **(Random mutation)** மூலம் மனிதனை தாக்குவதற்கு பரிணாமமடைந்துள்ளன என்றும், மரபணுவைப் படியெடுத்தல் **(Genome Sequencing)** மூலம் ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ்க்கு உலக சுகாதார நிறுவனத்தினால் கொவிட்-19 எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன் சிவியர் அக்யூட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம் கொரோனா வைரஸ் 2 அல்லது **Sars - Cov -2** என விஞ்ஞானிகளாலும் பெயரிடப்பட்டுள்ளது. இப்புதிய கொரோனா வைரஸ் சார்ஸ் **Cov – 2** வுடன் சேர்த்து மொத்தம் 7 கொரோனா வைரஸ்க்கள் இருப்பதாகவும் இவற்றில் **229E, NL63, OC43, HK01** ஆகிய நான்கும் ஆபத்தற்ற சளி, காய்ச்சலை உருவாக்குவதுடன் **Mers – Cov** மற்றும் **Sars – Cov** ஆகிய இரண்டும் விலங்குகளை தாக்குபவையாக இருந்து பரிணமித்து மனிதர்களை தாக்குவதாகவும் கூறப்படுகின்றது. இபபுதிய கொரோனா வைரஸானது வௌவால்களிடம் இருந்து எறும்புண்ணிகள் போன்ற இடைநிலை விலங்குகளுக்கு கடத்தப்படுவதாகவும் இவ் எறும்புண்ணிகளானது சீனாவின் பல பகுதிகளில் சுவையானதொரு உணவாக நுகரப்படுவதனால் இவ் வைரஸானது மனிதனுக்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

**கொரோனோ வைரஸ் எவ்வாறு பரவலடைகின்றது?**

மனிதரின் சுவாசப்பாதையில் பாதிப்பை ஏற்படுத்தும் இவ் வைரஸின் தொற்றானது மிக லேசான அளவிலிருந்து மிக பாரிய அளவிலான வரையறையினுள் இருக்க முடியும். இவ் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் வெளிச் சுவாசத்தின் போது உருவாகும் சிறிய நீர்த்துளிகளானது சுவாசம், கதைத்தல், இருமல் அல்லது தும்மல் போன்ற செயற்பாடுகளின் போது இவ் வைரஸ்க்கள் வளியினூடாகப் பரவுவதற்கு வழி வகுப்பதுடன் இவ் வைரஸ்க்கள் பரவியுள்ள பொருட்களை அல்லது இடங்களைத் தொட்டுவிட்டுப் பின்பு முகத்தை தொடும் போது இவ் வைரஸானது சுவாசப்பாதை மற்றும் வாய் வழியாக உடலினுள் நுழைகின்றது. உடலின் கலங்களில் நுழையும் கொவிட்-19 வைரஸ்க்கள், உடற் கலங்களை முதலில் ஆக்கிரமித்துக் கொண்டு தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும். சார்ஸ்-சி.ஓ.வி - 2 என அதிகாரபூர்வமாக குறிப்பிடப்படும் கொரோனா வைரஸானது முதலில் தொண்டையருகே உள்ள கலங்களில் தொற்றிக்கொள்வதுடன் சுவாசப்பாதை மற்றும் நுரையீரலிற்குச் சென்று அவற்றை கொரோனா வைரஸ் உற்பத்திச் சாலைகளாக மாற்றிப் பெரும் எண்ணிக்கையில் புதிய வைரஸ்க்களை உருவாக்கி உடலில் அதிக கலங்களில் தொற்றினை ஏற்படுத்துகின்றன. இதனால் தொற்றுடைய நபர்களுக்கு அருகில் இருப்பவர்கள் குறிப்பாக குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கும் வைரஸ் தொற்றுதல் அடையலாம் எனக் கூறப்படுவதுடன் இக்



கொவிட் - 19 வைரஸானது உடல் மேற்பரப்பில் எவ்வளவு காலம் வாழக்கூடியது என்பது தொடர்பான பல விடயங்கள் இன்னும் இனங்காணப்படாததொன்றாகவே இருந்து வருகின்றன.

இத்தொற்றின் ஆரம்ப நிலையில் அறிகுறிகள் அறியப்படாவிடினும் தொற்றேற்பட்டு ஆகக்குறைந்தது 2-14 நாட்கள் வரையான காலப்பகுதியில் இத் தொற்றிற்கான அறிகுறிகளைக் கண்டறியலாமென தற்போதைய மதிப்பீடுகளின்படி பரிந்துரைக்கப்படுவதுடன், இது நபருக்கு நபர் வேறுபடும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் வெளிப் படையாகப் புலப்படாத நபர்கள் தாம் தொற்றுக்குள்ளானது தெரியாத சந்தர்ப்பத்தில் வேலை, மதவழிபாடு மற்றும் பல இடங்களுக்கு செல்வதுடன் மற்றவர்களுக்கு அருகில் அல்லது அவர்கள் பாதிக்கப்படக்கூடிய வகையில் சுவாசிப்பதனால் இவ் வைரஸினை பரப்ப இயலுமென ஜேர்மனியில் மேற்கொள்ளப் பட்டதொரு ஆராய்ச்சியில் இருந்து நோய்த்தொற்று வல்லுநர் **Dr.Willium Schalfnely** தெரிவித்துள்ளார். எனினும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப் பட்ட அறிக்கையில் இக்கொரோனா வைரஸ் நோய்க்கான அறிகுறியற்ற பதிவுகள் அரிதாகவே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொரோனா நோய்க்கான அறிகுறிகள்**

கொவிட்-19 வைரஸினுடைய தொற்று ஏற்பட்டால் காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் அல்லது மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் காணப்படுவதுடன் இவ் வைரஸின் தாக்கம் கடுமையான நிலையில் சுவாசப் புண்கள் மற்றும் நிமோனியா **(Pneumo nia)** போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

**குழந்தைகளில் கொரோனா தொற்றின் அறிகுறிகள்**

வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுப் பகுதிகளில் தசைப்பிடிப்பு ஆகியவை குழந்தைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதற்கான அறிகுறிகள் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**இலேசான தொற்று (Mild Infection)**

ஏறத்தாழ பெரும்பாலானவர்களுக்கு இவ்வாறான நிலை இருக்கும். இலேசான தொற்று ஏற்படின் காய்ச்சல், இருமல் முக்கிய அறிகுறிகளாக இருப்பதுடன் உடல் வலி, தொண்டை வரட்சி, மற்றும் தலைவலி என்பன ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது.

கொவிட் - 19 வைரஸினுடைய தொற்று இலேசான நிலையில் உள்ள நபர் ஒருவரில் தோன்றும் அறிகுறிகள் சாதாரணமாக வரும் சளிக்காய்ச்சல் அல்லது தொண்டைப்புண், இருமல் போன்றதை ஒத்திருப்பதனால் இவ் வைரஸ் தொற்றினை ஆரம்ப நிலையில் கண்டறிவது கடினமானதொன்றாகவே உள்ளது. இது மட்டுமல்லாது கொவிட் - 19 தொற்றுக்குள்ளான நோயாளிகளில் இரைப்பை, குடல் சார்ந்த கோளாறுகள் அல்லது வயிற்றுப் போக்கு போன்ற வேறு நோய் அறிகுறிகளும் காணப்படலாம்.

காய்ச்சல், அசௌகரியமான உணர்தலும் தொற்றுப்பரவியதற்கு எதிராக உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியின் செயற்பாட்டினால் ஏற்படக்கூடியவை. இவ் வைரஸ் ஊடுருவல் கிருமியாக இருப்பதுடன் உடலின் மற்றக்கலங்கள் ஏதோ தவறு நேர்ந்திருக்கின்றது என உணர்ந்து சைட்டோகின்ஸ் **(Cytokines)** என்ற இரசாயனத்தை உற்பத்தி செய்யும். இவையே நோயெதிர்ப்பு சக்தியாகச் செயற்படும்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட ஆரம்ப நிலையில் ஏற்படும் இருமல் ஆரம்பத்தில் வறட்டு இருமலாக இருக்கும். பின்னர் வைரஸ் தொற்று ஏற்படும் போது கலங்களில் எரிச்சல் நிலை தோன்றுவதுடன் சிலருக்கு இருமலின் போது கெட்டியான சளி வெளியாகும்.

இவ் வைரஸின் தொற்றானது இலேசான நிலையில் உள்ளவர்கள் விரைவில் குணமாகிவிடுவார்.

(தொடரும்...)

ஆக்கம் - ஏ.விதுஷா உதவி விரிவுரையாளர்,
விலங்கியல் துறை, விஞ்ஞான பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சடலங்களை தகனம் செய்வது குறித்த வர்த்தமானியை ரத்து செய்யுங்கள்

## அதாவுல்லா கண்டனம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரை தகனம் செய்யவேண்டுமென வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது. ஆகையால், அதை இரத்துச் செய்யவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "கொரோனா வைரஸால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதா? அல்லது புதைப்பதா? என்கிற பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தில் அடக்கம் செய்ய முடியுமென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், பாராளுமன்றத்தைக் கூட்டாது, கொரோனா வைரஸால் உயிரிழப்போரை எரிக்க வேண்டுமென வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் சட்டத்துக்கும், பாராளுமன்ற கலாசாரத்துக்கும் எதிரானது என்பதால், அதனை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)




சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னையின் 96 வது பிறந்த தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தால் வெளியிடப்படும் காலாண்டுச் சஞ்சிகை பிறந்த நாள் சிறப்பு மலராக நேற்று வெளியிடப்பட்டது.இந் நிகழ்வு ஆலய தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் ஆலய வளாகத்தில் இடம் பெற்றது. (படங்கள்-ரவிசாந்)

# விவசாயத்துறையை மேம்படுத்த விசேட படையணி

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப்பெற்றுக் கொள்ளும் நோக்கில் இராணுவத்தில் விவசாயம் மற்றும் கால்நடை படையணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விவசாயம் மற்றும் கால்நடை படையணியின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெற்றது. (நி-4)



நாட்டில் நீடிக்கும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி - அக்குரணை பகுதியில் தொடர்ந்தும் வெள்ள நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதன் காரணமாக கண்டியிலிருந்து மாத்தளை வரை பயணிப்போர் மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# தங்கமுட்டை போடும் வாத்தை தாரைவார்க்க நாம் முட்டாள்கள் அல்லர்

(கொழும்பு)

தங்க முட்டை போடும் வாத்தை மாற்றானொவருக்கு கொடுத்து விடும் அளவிற்கு நாம் பலவீனமானவர்களல்லர்.

ஆகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நிர்வாகத்தை இந்தியாவிற்கோ அல்லது மற்றுமொரு தரப்பிற்கு விட்டுக்கொடுத்து வேடிக்கை பார்த்துக் கொண்



டிருக்க போவது மில்லை என தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ச , 51 வீதமான பங்குகளுடன் நிர்வாக மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரங்கள் இலங்கைவசமே இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (நி-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2200

### யுகேஷ்





### வானதி




### திவா




### மஞ்சு




### நதுஷன்




### கயல்விழி





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாடசாலைகள் ஆரம்பமானதும் சீருடைத்துணிகள் விநியோகிக்கப்படும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

**(கொழும்பு)**
**பாடசாலைகள் ஆரம்பித்ததும் மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க நேற்று முன்தினம் வாய்மூல பதிலை எதிர்பார்த்து கேள்வியொன்றை சமர்ப்பித்த போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இடைக்கேள்வி ஒன்றை கேட்டார். மாணவர்களுக்கு புது வருடத்திற்கான சீருடைத் துணி இன்னமும் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர், சீருடைத் துணி வழங்கும் வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது. பாடசாலைகளை தொடங்காமல், சீருடையை விநியோகிப்பது நடைமுறைக்கு சாத்தியமானது அல்ல.

தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான வகுப்புக்களுக்குரிய பாடப் புத்தகங்கள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஆரம்பமானவுடன், புதிய புத்தகங்கள் மாணவர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# நாட்டை இராணுவமயப்படுத்த ஒருபோதும் அனுமதியோம்

## பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக செயற்படுவோம்



(கொழும்பு)

கொவிட் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக தற்போது 25 மாவட்டங்களுக்கும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மாவட்ட மட்டத்தில் காணப்படும் இந்த நியமனங்கள் எதிர்வரும் காலங்களில் பிரதேசசபை மட்டத்திலும் முன்னெடுக்கப்படும்.

எவ்வாறான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் இலங்கையை இராணுவ மயப்படுத்த பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் ஒரு போதும் இடமளியோம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் 48 இராணுவ வீரர்கள் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான நியமனங்கள் மூலம் இலங்கை இராணுவமயமாக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வழங்கப்பட்டுள்ள 25 மாவட்டங்களுக்கான கொவிட் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மாவட்ட செயலாளர்களை விட அதிகாரம் மிக்கவர்களாகவுள்ளனர்.

இவர்களால் எவ்வாறு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்? வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக ஒத்துழைப்பை மாத்திரமே இவர்களால் வழங்க முடியும்.

இந்த நியமனங்கள் அநாவசியமானது. காரணம் ஒவ்வொரு மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் பல மட்டங்களில் சுகாதார அதிகாரிகள் காணப்படுகிறார்கள்.

கடந்த ஒரு வருட காலமாக அவர்களாலேயே கொவிட் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் பதவிகளுக்கும் இராணுவ நியமனங்கள் வழங்கப்படுமாயின் வைத்தியத் துறையில் விசேட நிபுணத்துவம் பெற்றவர்கள் எதற்காக இருக்கிறார்கள்? தற்போது மாவட்ட மட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இராணுவ நியமனங்கள் எதிர்வரும் காலங்களில் பிரதேசசபை மட்டத்திலும் வழங்கப்படும். ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையை இராணுவமயப்படுத்த முடியாது.

அதற்கு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக நாம் நடவடிக்கை எடுப்போம். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை அமைக்க பல வகையில் முயற்சிகளை மேற்கொண்ட பௌத்த மதத் தலைவர்கள் பெருமளவில் அதிருப்தியடைந்துள்ளனர். இவர்கள் மாத்திரமின்றி சர்வதேச தலைவர்களும் இலங்கை தலைமைத்துவத்தை விமர்சிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விடுதலை

ஒரு சுதந்திர போராட்ட வீரன் ஒரு காட்டு வழியாகத் தனியாக போய்க் கொண்டிருக்கின்றான். இருட்டிப் போய்விட்டது. என்ன செய்வது என்று பார்த்தான். அங்கே ஒரு சத்திரம் தெரிந்தது. சரி... இன்றைக்கு ராத்திரி இங்கேயே தங்கி இருந்துவிட்டுக் காலையில் போகலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

நேராகப் போனான். அங்கே தங்கிக் கொண்டான். படுத்திருக்கின்றான். சரியாக தூக்கம் வரவில்லை..ஏதோ சத்தம் உயரே பார்க்கின்றான். அங்கே ஒரு கிளிக்கூண்டு தொங்கிக் கொண்டிருக்கின்றது.

அந்தக் கூண்டுக்குள்ளே ஒரு கிளி...

கூண்டுக்குள்ளே அடைக்கப்பட்ட கிளி உள்ளே இருந்து கொண்டே சுதந்திரம் -சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருக்கிறது.

இவன் அதைப் பார்க்கின்றான். இவனுக்கு மனது என்னமோ மாதிரி ஆகிவிட்டது. ஐயோ பாவம் இந்தக் கிளியை இப்படிக் கூண்டுக்குள்ளே அடைத்துவிட்டார்கள். அது மனதிற்குள் என்ன பாடுபடும். விடுதலை அடைவதில்தான் அதற்கு எவ்வளவு ஆசை. அதுதான் சுதந்திரம் சுதந்திரம் என்று அதேவார்த்தையை திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இவனுக்கு தான் சிறையில் இருந்த நாட்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. அவனுக்குத் தெரியும் அடைபட்டிருக்கின்றது எவ்வளவு கொடுமை என்று. அந்தக் கிளியுடைய நிலைமையும் அப்படித் தானே என்பதை நினைத்துப் பார்த்தான். மிகவும் உணர்ச்சி வசப்பட்டான். உடனே ஒரு முடிவுக்கு வந்தான்.

சரி... இந்தக் கூண்டுக்கிளிக்கு நாம் சுதந்திரம் வாங்கிக் கொடுப்போம். இந்தச் சத்திரத்து உரிமையாளருக்குத் தெரியாமல் அந்தக் கூண்டை திறந்து விட்டுவிடுவோம் என்று நினைத்து... மெதுவாக எழுந்து இரகசியமாக அந்தக் கூண்டைத் திறந்துவிட்டான்.

உள்ளேயே உட்கார்ந்து பழக்கப்பட்ட கிளி...கூண்டு உள்ளேயே உட்கார்ந்து இருந்தது. அதை மெதுவாக வெளியிலே எடுத்தான். வாசலுக்கு வந்தான். பறக்க விட்டுவிட்டான். இவன் மறுபடியும் உள்ளே போய் படுத்துக் கொண்டான். இப்பொழுது அவனுக்கு நிம்மதியாக தூக்கம் வந்தது. கிளிக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்துவிட்டான். அதனால்.. பொழுது விடிந்தது. காலையில் இந்த வீரன் நிம்மதியாகக் கண் விழித்துப் பார்க்கின்றான்.

அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி. மேலே தொங்கிக் கொண்டிருந்த கூண்டைப் பார்க்கின்றான். அந்தக் கூண்டுக் கதவு திறந்தது திறந்தபடியே இருக்கு...இராத்திரி வெளியில் கொண்டு போய்விட்ட கிளி மறுபடியும் கூண்டுக்குள்ளே வந்து உட்கார்ந்து கொண்டது.

சுதந்திரம்-சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருக்கு.. இவன் இப்பொழுது தான் உண்மையை புரிந்து கொள்கின்றான்.

அந்தக்கிளி சுதந்திரம் சுதந்திரம் என்று கத்திக் கொண்டிருந்தது உண்மை. ஆனால் அந்த வார்த்தையோடு அர்த்தம் தெரியாமல் அது கத்திக் கொண்டிருக்கின்றது.

ஏதோ பழக்கதோசத்திலே அது அப்படி பேசிக் கொண்டு இருந்திருக்கு..அவ்வளவு தான்..எதற்கு இந்தக் கதையைச் சொல்கின்றேன் என்றால் இன்றைக்கு எங்களிலே பலபேர் கூட அந்த வார்த்தையை அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

அந்தக்கிளி மாதிரியே தான் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்.

அன்றைக்கு ஒரு நாள் ஓகஸ்ட் மாதத்தில் அந்நியர்களை வெளியேறச் சொன்னோம் (8.8.1942). அதே மாதிரி இன்னொரு ஓகஸ்ட் மாதத்தில் அவர்கள் வெளியே போய்விட்டார்கள் (15.08.1947). அந்நிய மனோபாவம் எங்களிடம் இருந்து வெளியேறிவிட்டதா? என்பதை யோசிக்க வேண்டிய நேரம் இது.

அது போனால் தானே நாம் நாமாக வாழ முடியும். விடுதலையின் அர்த்தம் புரியாமல் அதைப்பற்றி வேகமாக பேசிக் கொண்டிருப்பதால் என்ன பிரயோசனம்? நமக்கு விடுதலை கிடைத்த சமயத்திலே டாக்டர் ராதாகிருஷ்ணன் சொன்னார்.

என்ன சொன்னார் தெரியுமா? இன்று இரவு நமக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகின்றது. நாளையில் இருந்து நாம் செய்கின்ற தவறுகளுக்கு ஆங்கிலேயர்கள் மீது பழிபோட முடியாது என்றார். எதிர்காலம் நல்லபடியாக இருக்கின்றது. நம் கையில் தான் என்று சொன்னார்.

ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி..நாட்டின் எதிர்காலம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஒரு கூட்டத்தில். உங்களிடம் சொல்வதற்கு என்னிடம் ஒரு நல்ல செய்தியும் ஒரு கெட்ட செய்தியும் இருக்கு...


கி.பி.2000 க்குப் பிறகு நாமெல்லாம் கழிவு நீரைச் சுத்தப்படுத்தித் தான் சாப்பிட வேண்டியிருக்கும் என்றார்.

சரி..நல்ல செய்தி என்ன அதைச் சொல்லுங்கள் என்றார்கள். நான் இப்பொழுது சொன்னது தான் நல்ல செய்தி..கெட்ட செய்தி என்னவென்றால் அப்பொழுது குடிநீராக சுத்தம் செய்ய போதுமான அளவுக்குக் கழிவு நீர் கிடைக்குமா? என்பது தான் என்றார்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதன் காரணமாக கட்டுப்பாடு களற்ற கடல் சுதந்திரம் என்னும் பழைய கண்ணோட்டம் காலத்திற்குப் பொருந்தாததாக ஆகிவிட்டது. புதிய உலக அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப கடல் சட்டத்தை புதிதாக மறு வரையறை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்காகவே 1958 இல் கடல் சட்டம் பற்றிய ஜெனிவா மாநாடும், 1960 இல் மற்றொரு ஜெனிவா மாநாடும் நடத்தப்பட்டது. 1958 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஜெனிவா மாநாட்டிலும் 1960 ஆம் ஆண்டு ஜெனிவா மாநாட்டிலும் எல்லையோரக் கடலின் அகலம் தொடர்பாக சர்வதேச நாடுகளிடையே ஒருமித்த கருத்து எதுவும் எட்டப்படவில்லை.

1960 களுக்குப் பின்னர் விஞ்ஞான - தொழில்நுட்ப வளர்ச்சியில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. இவ் வளர்ச்சியின் காரணமாக ஆழ்கடலில் கடலடித்தளத்தில் கிடைக்கும் தாதுக்கள் மற்றும் இயற்கை வளங்களைக் கண்டறிவதும் தோண்டி எடுப்பதும் சாத்தியமாயிற்று. இதனால் கடல்களின் பொருளாதாரம் மீன் வளத்தையும் தாண்டி தாது வளம் சார்ந்தவையாக மாறியது.

குறிப்பாக மாங்கனிஸ், நிக்கல், தாமிரம் மற்றும் கோபால்ட் உள்ளிட்ட 40 இற்கும் மேற்பட்ட உலோகங்கள் அடங்கிய மாங்கனீஸ் திரளைக் கற்கள் (Maganese Nodules) கடலடித்தளத்தில் அபரிமிதமாகக் கிடைப்பது கண்டறிப்பட்டது. இந்த உலோகங்கள் யாவும் அடிப்படைத் தொழில்களுக்கு அவசியமான தாதுக்களாகும். இவற்றின் தேவை வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிகம் இருந்தது. அத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாடுகளாக வளரும் நாடுகளாகிய கடலோர நாடுகள் இருந்தன. அவை இக்கடல் வளங்கள் மீது முழு உரிமை கோரின.

எல்லையோரக் கடலின் அகலம் தொடர்பான பிரச்சினைக்கு இறுதியாக 1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டின் மூலம் தீர்வு காணப்பட்டது. 1982 ஆம் ஆண்டு UNCLOS (United Nations Convention on the Law of the Sea) எனும் சர்வதேச அமைப்பு உருவானது. கடலில் எல்லை எவ்வளவு தூரம் யாருக்கு, எங்கே, எவ்வளவு அதிகாரம் என்பதை எல்லாம் இது வரையறுத்தது. கடல் எல்லைகள் குறித்து சர்வதேச அளவில் ஒழுங்குகளைக் கொண்டு வந்தது இந்த அமைப்பு.

**கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாடு, 1982 (U.N: Convention on the law of Sea,1960-UNCLOS)**

**கடல் சட்டம் பற்றிய ஜெனிவா** மாநாடு, 1958 (Geneva Conference on Law of Sea) நாடுகளின் கடல் பரப்பின் மீதான உரிமைக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் 1958 இல் ஜெனிவாவில் கடல் சட்டம் பற்றிய சர்வதேச மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டின் முடிவில் நான்கு தீர்மானங்கள் ஏற்கப்பட்டன. அவை: (i) எல்லையோரக் கடல் மற்றும் எல்லையோரக் கடலை அடுத்த மண்டலம் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (ii) ஆழ் கடல்கள் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (iii) மீன் பிடித்தல் மற்றும் வாழ்வாதார வளங்களைப் பாதுகாத்தல் பற்றிய மாநாட்டுத் தீர்மானம் (iv) கண்டத்திட்டு பற்றிய மாநாட்டுத் தீர்மானம்.

1958 ஆம் ஆண்டு மாநாட்டில் ஏற்கப்பட்ட நான்கு தீர்மானங்களையும் எல்லா நாடுகளும் முழுமையாக ஏற்று நடைமுறைப்படுத்தவில்லை. சில நாடுகள் அந்நான்கினுள் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தின. இவற்றின் காரணமாக 1958 ஆம் ஆண்டு மாநாடு அதன் நோக்கத்தில் முழு வெற்றி பெறவில்லை. எனவே கடல் சட்டம் பற்றிய மூன்றாவது மாநாடு கூட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1970 டிசெம்பர், 17 அன்று ஐ.நாவின் பொதுசபையில் இரண்டு முக்கியமான தீமானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவ்வை:

(i) தேசிய அதிகார வரம்பிற்கு அப்பால் உள்ள கடல் அடித்தளம் (Sea bed) கடல் தரை (Ocean floor) மற்றும் அடி மண் (Subsoil) தொடர்பான கோட்பாடுகள் பற்றிய அறிக்கை.

(ii) கடல் சட்டம் பற்றிய மூன்றாவது ஐ.நா. மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்படுகிறது.

அதன்படி மூன்றாவது மாநாட்டின் (UNCLOS) முதல் அமர்வு 1973, டிசெம்பர் 3 முதல் 15 ஆம் திகதிகளில் நியூயோர்க்கில் நடைபெற்றது. அதன் பிறகு 1982 வரை பத்து அமர்வுகளாக நடைபெற்ற அம் மாநாட்டின் இறுதியில் 1982 ஏப்ரல் 30 அன்று கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டுத் தீர்மானம் ஏற்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக இலங்கையின் ஐக்கிய நாடுகளிற்கான நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சேர்ளி அமரசிங்க நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தீர்மானத்திற்கு ஆதரவான 130 நாடுகளின் பெரும்பான்மை ஆதரவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்க, இஸ்ரேல், துருக்கி, வெனிலா ஆகிய நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன. சோவியத் யூனியன், பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி, மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. 1982 செப்டெம்பர் மாதத்தில் அம் மாநாட்டுத் தீர்மானத்தில் நாடுகள் ஒப்பமிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

1982, டிசெம்பர் 10 அன்று ஜமைக்காவில் உள்ள மான்டிகோபே (Montergo bay) என்னுமிடத்தில் அம் மாநாட்டுத் தீர்மானம் நாடுகளால் கையொப்பமிடப்பட்டது. அப்போது சோவியத் யூனியன் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. இறுதியாக 119 நாடுகள் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டன. இரண்டு ஆண்டுகள் வரை ஒப்பமிடக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

1988 நவம்பர் வரையில் 159 நாடுகள் ஒப்பமிட்டிருந்தன. அதில் 60 நாடுகள் தீர்மானத்தை மறு ஏற்புறுதி செய்திருந்தன. எனவே 60 ஆவது நாடாக கயானா ஏற்புறுதி செய்த நாளான 1994 நவம்பர் 16 முதல் இம் மாநாட்டுத் தீர்மானம் செயலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இலங்கை 1994 ஜூலை 19 அன்று ஏற்புறுதி செய்தது. இந்தியா 1996 ஜூன் 29 அன்று ஏற்புறுதி செய்தது. ஜூன் 2016 நிலவரப்படி, 167 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இதில் இணைந்துள்ளன.

**கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாடு (UNCLOS) முதல் அமர்வு 1973, டிசெம்பர் 3 முதல் 15 ஆம் திகதிகளில் நியூயோர்க்கில் நடைபெற்றது. அதன்பிறகு 1982 வரை பத்து அமர்வுகளாக நடைபெற்ற அம் மாநாட்டின் இறுதியில் 1982 ஏப்ரல் 30 அன்று கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டுத் தீர்மானம் ஏற்கப்பட்டது. 1988 நவம்பர் வரையில் 159 நாடுகள் ஒப்பமிட்டிருந்தன. அதில் 60 நாடுகள் தீர்மானத்தை மறு ஏற்புறுதி செய்திருந்தன. எனவே 60 ஆவது நாடாக கயானா ஏற்புறுதி செய்த நாளான 1994 நவம்பர் 16 முதல் இம் மாநாட்டுத் தீர்மானம் செயலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இலங்கை 1994 ஜூலை 19 அன்று ஏற்புறுதி செய்தது. இந்தியா 1996 ஜூன் 29 அன்று ஏற்புறுதி செய்தது. ஜூன் 2016 நிலவரப்படி, 167 நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் இதில் இணைந்துள்ளன.**

**கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாடு 1982 இன் முக்கிய அம்சங்கள்**

1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டுத் தீர்மானம் 320 சரத்துகளைக் கொண்டதாகவும் 17 பாகங்களாகப் பிரிக்கப்பட்டும் உள்ளது. அதனுடன் 9 இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1) இம்மாநாட்டுத் தீர்மானத்தில் எல்லையோரக் கடலின் அகலம் 12 கடல் மைல்கள் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2) தீங்கற்ற பாதையுரிமை (Right of Innocent Passage) கூடுதல் துல்லியத்துடனும் கூடுதல் விரிவுடனும் வரையறுக்கப்பட்டது.

3) "தனியுரிமை பொருளாதார மண்டலம்" (Exclusive Economic Zone) எனும் புதிய கருத்தாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கரையோர நாடுகளின் கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் வரை உள்ள பகுதி அந்நாட்டின் தனியுரிமை பொருளாதார மண்டலமாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

4) "எல்லையோரக் கடலை அடுத்த மண்டலம்" (contiguous Zone) எனும் பகுதி வரையறுக்கப்பட்டு அதில் கரையோர நாடுகளுக்கு, அதன் வழக்காறுகள், சட்டங்களை மீறுபவர்களை தண்டிப்பதற்கும் தடுப்பதற்குமான அதிகார வரம்பு வழங்கப்பட்டுள்ளது.

5) சர்வதேசக் கடல் போக்குவரத்திற்குப் பயன்படும் நீரிணைகளுக்கான சிறப்பு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

6) "தீவுக் கூட்டங்களின் கோட்பாடு" (Archipelagic principle) அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி தீவுக் கூட்டங்களில் உள்ள தீவுகளைச் சுற்றிலும், தீவுகளுக்கு இடையிலும் தீவுகளை இணைக்கும் வகையிலும் இருக்கும் அனைத்து நீர்களும், அத்தீவுக் கூட்டங்களின் மீது இறையாண்மை அதிகாரம் பெற்ற நாட்டின் உள்நாட்டு நீர்களாகும்.

**"எல்லையோரக் கடலை அடுத்த மண்டலம்" அல்லது அண்மைக் கடற்பரப்பு (contiguous Zone) எனும் பகுதி வரையறுக்கப்பட்டு அதில் கரையோர நாடுகளுக்கு, அதன் வழக்காறுகள், சட்டங்களை மீறுபவர்களை தண்டிப்பதற்கும் தடுப்பதற்குமான அதிகார வரம்பு வழங்கப்பட்டுள்ளது.**


7) கடல் சுற்றுச் சூழலின் மாசுக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

8) ஆழ்கடல்களின் உயிர் வளங்களை மேலாண்மை செய்வதிலும் பாதுகாப்பதிலும் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு பற்றிய கோட்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

9) நான்கு புறமும் நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளுக்கும் (Locked states) கடல் வரை உள்ள இடைப்பட்ட நாடுகளுக்கும் (transit states) இடையே உள்ள உறவுகளை வழிப்படுத்தும் சிறப்பு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

(தொடரும்...)

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானம்



(கொழும்பு)

புதிய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இந்த நிலையில், வைரஸ் தொற்று அபாயம் அதிகமுள்ள மேல் மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களில் விளையாட்டுப்போட்டிகளை ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களை எக்காரணம் கொண்டும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்க வேண்டாம் என்றும் இந்த கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மெய்வல்லுநர் போட்டிகள், குழு விளையாட்டுக்கள், பாடசாலை பிக் மச் போட்டி போன்றவற்றை நடத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நோய் அறிகுறிகளுடைய மற்றும் நோய்வாய்ப்பட்டுள்ள எந்தவொரு பிள்ளைகளையும் விளையாட்டுப் போட்டிகளுக்கு உட்படுத்தக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## தல விருட்ச மகிமை

(தொடர்ச்சி)

தல விருட்சத்தின் மகிமையைச் சொல்ல இந்த ஒரு உதாரணமே போதுமானது. தல விருட்சமாக இந்த மரம் தான் இருக்க வேண்டும் என்ற எந்தெந்த மரத்தின் கீழ் இருந்து தவம், தியானம் செய்து சித்தி பெற்றார்களோ அதற்கு ஏற்ப தல விருட்சம் அமையும். அது எந்தக் காலத்திலும் மாறாது.

பண்டைக்காலத்தில் எந்தெந்த மரங்களின் அடியில் தவம் செய்தால் எந்தெந்த மந்திரங்களை உச்சரிக்க வேண்டும். எந்தெந்த கடவுள்களை வழிபட வேண்டும் என்றெல்லாம் நூல்களில் கூறப் பட்டுள்ளன. இது நாளடைவில் இந்தத் தெய்வம் உள்ள ஆலயங்களுக்கு இந்த மரம்தான் தலவிருட்சமாக இருக்கும் என்ற மரபை தோற்றுவித்து விட்டது.

விநாயகர் கோவில் என்றால் ஆலமரம், அரச மரம், வன்னி மரம், விளா மரம், நாக மரம் தல விருட்சங்களாக இருக்கும் என்று கூறப்பட்டது.

அதுபோல சிவாலயங்கள் என்றால் வில்வம், விளா, மாமரம், வேம்பு ஆகிய மரங்களும் பெருமாள் கோவில்களில் இலந்தை, அத்தி, பாரிஜாதம் போன்ற மரங்களும் அம்மன் கோவில்களில் வேம்பு, மாமரம், விளா, பலா, வில்வம் ஆகிய மரங்களும் தலவிருட்சமாக இருக்கும் என்ற நிலை ஏற்பட்டது.

முருகப்பெருமான் அருள்புரியும் கோவில்களில் வேங்கை, கடம்பு, மா, பலா ஆகியவை தல விருட்சம் என்ற சிறப்பை பெற்றன. ஆனால் தல விருட்சம் என்றால் இவ்வளவு மரங்கள்தான் என்று நினைக்காதீர்கள். நூற்றுக்கும் மேற்பட்ட மர வகைகள் தல விருட்சமாக உள்ளன. ஒரு சிவாலயத்தில் பனை மரம் கூட தல விருட்சமாக உள்ளது. ராமநாதபுரம் முருகன் கோவிலில் சாயா மரம் என்று ஒரு தல விருட்சம் உள்ளது. இது மாதிரி தமிழ்நாட்டில் வேறு எந்த ஆலயத்திலும் இல்லை.

இந்தத் தல விருட்சங்கள் அந்தந்த கோவில்களில் அருள்பாலிக்கும் சுவாமிக்கு ப்ரீத்தியான மரமாக நடப்பட்டு வழிபாடுகள் நடக்கும். ஒவ்வொரு ஆலயத்திலும் தல விருட்சம் என்பது அவசியம் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று ஆகம விதிகளில் கூறப்பட்டுள்ளது.

ஏனெனில் தலத்துக்கு ஏற்ப தல விருட்சங்களும் நமக்கு பலன்கள் கொடுக்கும் ஆற்றல் கொண்டது. அரச மரத்தை வழிபட்டால் மகிழ்ச்சி உண்டாகும். வில்வ விருட்சத்தை வழிபட்டால் தன இலாபம் உண்டாகும். பாரிஜாதம் தல விருட்சத்தை வழிபட்டால் சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்பார்கள். ஆடி மாதம் பௌர்ணமித் தினத்தன்று அரச மரத்தை பூஜை செய்து வழிபட்டால் சாவித்திரி விரத பூஜைக்குரிய பலன்கள் கிடைக்குமாம்.

அதுபோல வில்வ மரம் தல விருட்சமாக உள்ள சிவாலயங்களில் கூடுதல் பலன் கிடைக்கும் என்கிறார்கள். சிவனுக்கு வில்வ இலைகளால் அர்ச்சனை செய்வது மிக விசேஷமானது.

வாழ்நாள் முழுவதும் தினமும் ஆத்ம லிங்கத்தை ஒரு வில்வ இலையால் பூஜித்து வந்தால் ஒரு கோடி லிங்கங்களை வைத்து வழிபட்டதற்கு இணையான பலன் கிடைக்கும் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## வைத்தியருக்கு கொரோனா விடுதிகளுக்கு பூட்டு

(இரத்தினபுரி)

இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் 3 விடுதிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

தமது வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்களுக்கு எழுமாற்றாக பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், விடுதியொன்றில் பணிபுரியும் வைத்தியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன், அங்கு சிகிச்சை பெற்று வந்த 9 நோயாளர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

## பயணிகளை நான்கு பிரிவுகளாக அழைத்து வர தீர்மானம்


(கொழும்பு)

இலங்கையில் விமான நிலையங்கள் திறக்கப்பட்டதன் பின்னர் 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையங்கள் மீளத் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே 4 பிரிவுகளாக பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-4)

## முகக்கவசம் அணிய தவறியோருக்கு தொற்று உறுதி



(கொழும்பு)

முகக்கவசம் அணியத் தவறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் மேலும் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முகக்கவசம் அணியத்தவறிய 523 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர்களில் 252 பேருக்குக் கொரோனாப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

## சமிக்ஞை படையணியின் வரலாற்று நூல் கையளிப்பு

(கொழும்பு)

இராணுவத்தின் சமிக்ஞை படையணியின் "வரலாற்று நூல்" நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பணிக்குழாம் பிரதானியும் படையணி தளபதியுமான மேஜர் ஜெனரல் டி.ஏ.பி.என் தெமடன்பிட்டியவினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணி 1943 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி நிறுவப்பட்டது. தகவல் தொழில்நுட்பம், சமிக்ஞை நடவடிக்கைகள், இணைய நடவடிக்கைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட படைப்பிரிவின் 77 ஆண்டுகால வரலாறு குறித்த அனைத்து தகவல்களும் கொண்ட ஒரு ஆய்வு நூலாக இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## மாற்றம்



ஒரு நாள் அலுவலகத்தில் வேலை செய்யும் பணியாட்கள் நோட்டீஸ் போர்டில் ஏதோ எழுதி இருக்கிறதே என்று பார்க்கச் சென்றனர்.

அதில் உங்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார். அடுத்த கட்டடத்தில் அவர் உடல் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும் என்று எழுதி இருந்தது.

நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்த நபர் யாராக இருக்கும் என்று அவர்களுக்கு ஆர்வம் ஏற்பட்டது. அனைவரும் அடுத்த கட்டடத்திற்கு சென்றனர்.

சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சவப்பெட்டியை நெருங்க நெருங்க, நம் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவன் யாராக இருக்கும்.

நல்ல வேளை அவன் இறந்து விட்டான் என்று நினைத்த படியே முன்னோக்கிச் சென்றனர்.

சவப் பெட்டியினுள் எட்டி பார்த்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது.

சவப்பெட்டியினுள் யார் எல்லாம் பார்க்கிறார்களோ அவர்கள் முகமே அதில் தெரிந்தது. கண்ணாடி அருகில் ஒரு வாசகம் எழுதி இருந்தது.

உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் மட்டுமே காரணம். நீங்கள் வளர வேண்டும் என்றால் அது உங்கள் கையில் மட்டுமே உள்ளது.

உங்கள் வளர்ச்சியை உங்களை தவிர வேறு யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று எழுதியிருந்தது.

உங்கள் வாழ்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது.

**நீதி : நீங்கள் நினைத்தால் மட்டுமே உங்கள் வாழ்வை மாற்ற முடியும்.**

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### முடிச்சுக்கள் அவிழ்ந்தன

79

அவருடைய வார்த்தைகள் வீரர்களுக்கு உற்சாக மருந்தாக இருந்தது. ஆனால் போர்க்களத்துக்கு தயாராகலாம். வெற்றியைக் குவிக்கலாம் என்று ஆர்வத்துடன் இருந்த வீரர்களை உலுக்கும் விதமாக ஒரு செய்தி வந்தது.

மன்னர் அலெக்சாண்டருக்கு உடல் நிலை சரியில்லை. துடித்துப் போனார்கள் மாசிடோனிய வீரர்கள்.

எங்கே அந்த மருத்துவர்கள்? அழைத்து வாருங்கள் அவர்களை. இதோ இந்த நிமிடம் அவர்கள் இங்கே வந்தாக வேண்டும். கரகரத்த குரலில் உறுமினார் அலெக்சாண்டர்.

மருத்துவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். குண்டுக்கட்டாகத் தூக்கி வராத குறை தான். மருந்துகள், சிகிச்சைகள், இத்யாதிகள்.



மருத்துவர் பிலிப்

வரிசைக் கிரமமாக நடக்கத் தொடங்கின.

நேரம் கூடிக்கொண்டே போனது. உடல் நிலையில் துளி முன்னேற்றம்? ம்ஹூம். இன்னும் மோசமாகி இருந்தது. மருத்துவர்கள் தங்களுக்குத் தெரிந்த அத்தனை சிகிச்சைகளையும் செய்து பார்த்து விட்டார்கள். எல்லாமே விழலுக்கு இறைத்த நீர்.

ஒருகட்டத்தில் மன்னருக்கு சிகிச்சை அளிக்கவே அச்சம் கொள்ள ஆரம்பித்தார்கள் மருத்துவர்கள். சிகிச்சைகளைக் கொஞ்சம் வேகப் படுத்தி அதனால் உயிருக்கு ஆபத்தாகிவிட்டால்? தொலைத்து விடுவார்கள் தொலைத்து.

மருத்துவர்கள் எல்லோரும் பயந்து ஒதுங்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவரைத் தவிர. அவர் நேராக அமைச்சரிடம் வந்தார். வணக்கம் என்னுடைய பெயர் பிலிப். நான் ஒரு மருத்துவன். ஒரு விண்ணப்பம். சொல்லுங்கள்.

உடனடியாக மன்னரைச் சந்தித்துப் பேச வேண்டும். நெற்றியைச் சுருக்கினார் அமைச்சர். எதற்காக? அவருக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை ஒன்றைப் பற்றிப் பேச வேண்டும்.

வேறு வழியில்லை. எல்லா மருத்துவர்களும் தயங்கும்போது வருகிற வாய்ப்பை எதற்காக வீணடிக்க வேண்டும்? அமைச்சரின் அனுமதி கிடைத்தது.

அறைக்குள் சென்றார் மருத்துவர் பிலிப். மன்னர் அலெக்சாண்டர் அசதியோடு படுத்திருந்தார்.

(தொடரும்)

வாழ்க்கையில் வல்லவர் சிலரையும் காணலாம். ஆனால் நல்லவராயும் வல்லவராயும் உள்ளவர்கள் மிகச் சிலரையே இந்த உலகில் காண முடியும்.
– சார்லஸ் கோல்ட்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும் ஒற்றுமைப்படுத்தவும் வேண்டும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளார்.

இலங்கைக்கு வந்த அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடனான கூட்டமைப்பின் சந்திப்பு தமிழ் மக்களிடம் பல்வேறு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

2009ஆம் ஆண்டு இறுதிப் போர் முடிவுற்று பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்கள் பேசாப்பொருளாய் கிடப்பில் உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாத நிலையில், தமிழ் அரசியல் தரப்புகள் மிகுந்த பலவீனத்துடன் இயங்குகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை.

அதிலும் நான்கு, ஐந்து ஆண்டுகள் அரசாங்கத்துடன் இணங்கிச் செல்லுதல் என்ற கால் சர்ப்ப யோகத்துக்குள் அகப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தக் காலப் பகுதியில் போர்க்குற்ற விசாரணைகளை வலியுறுத்துவதையும் இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுவிப்பதிலும் அசமந்தமாக இருந்து விட்டது. இப்போதுதான் அவர்கள் விழித்துக் கொண்டதுபோல தெரிகிறது.

இருந்தும் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இலங்கை அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து எடுத்துக்கூறவோ அல்லது அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகளின் ஆட்சித் தலைவர்களைச் சந்தித்து நிலைமையை எடுத்தியம்புகின்ற சந்தர்ப்பங்களோ தமிழ் அரசியல் தரப்புகளுக்கு அறவே இல்லை.

இந்நிலையில் இந்தியாவின் தலையீடும் வகிபங்கும் இருந்தால் மட்டுமே ஈழத் தமிழர்களின் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதே யதார்த்தம்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்; தமிழர் தரப்பு ஒற்றுமையாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழர் தரப்புகள் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே தங்களால் அழுத்தம் கொடுக்க முடியும் என்பதாகக் கருத்துரைத்துள்ளார்.

அவர் கூறியது ஏற்புடையதாயினும் கூட்டமைப்புடனான சந்திப்பை தமிழ்த் தரப்புடனான சந்திப்பு என வைத்துக் கொண்டு; நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரையும் சந்திப்பில் இணைத்துக் கொண்டிருக்கலாமல்லவா? அதை இந்தியா செய்யாதது ஏன்? என்ற கேள்வியும் எழவே செய்யும்.

இங்குதான் ஒற்றுமையாக இருப்பதும் ஒற்றுமைப்படுத்துவதும் சம பங்குரிமை என்ற விடயம் கவனயீர்ப்புக்குரியதாகிறது.

# குடிநீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு-ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட குடிதண்ணீர் திட்டம் விரைவில் ஏற்கனவே தீர்மானித்தபடி நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதித்துள்ளது. இதன் பிரகாரம் 2021 இலிருந்து திட்டம் அமுலாகும். இவ்வாறு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

அனைத்துத் திணைக்கள தலைவர்கள் மற்றும் துறைசார் செயலாளர்களை சந்தித்த கடந்த கால அபிவிருத்தி முன்னேற்றம் குறித்த கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்ட காலமாக வடக்கு யாழ். மாவட்டம் உள்ளிட்ட ஏனைய மாவட்டங்கள் குடி தண்ணீரால் பல இடர்களை எதிர்கொண்டு வருகின்றன. கடல் நீரை நன்னீராக்கும் மெகா (Reverse Osmosis Mega Plan North) திட்டத்திற்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

விரைவில் கடல் நீர்த் திட்டம் நன்னீராக மக்களுக்கு கிடைக்கவுள்ளது. அமைச்சர் சமல் ராஜபக்ஷ மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோரால் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே இரணைமடுத் திட்டத்திற்குப் பதிலாக மருதங்கேணி திட்டம் விரைவில் செயலுருப்பெறும்.

இத் திட்டங்களை முன்னிறுத்துவதற்கான ஆளணிக்கும் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

எனவே மாகாண சபையில்லாத வேளையில் 5 அமைச்சுக்களையும் முன்னெடுத்து வருகின்ற எனக்கு தொடர்ந்து துறைசார் செயலாளர்களின் பங்களிப்பு ஒத்துழைப்பு தேவையென ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மேலும் தெரிவித்தார். (நி-4)

# காணி மத்தியஸ்த சபை நாளை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபை நாளை சனிக்கிழமை முதல் மீண்டும் யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான உத்தரவை நீதி அமைச்சின் மத்தியஸ்த ஆணைக்குழு யாழ். மாவட்ட காணி மத்தியஸ்த சபைத் தவிசாளர் தேவதயாளனுக்கு அறிவித்துள்ளது.

எனவே காணிப் பிணக்குடன் தொடர்புடையவர்கள் அதாவது யாழ் . மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பொது மக்கள் பிணக்கு தொடர்பான விபரங்கள், அதற்கான கடிதங்கள். வரைபடங்கள். 5 ரூபாய் முத்திரை மற்றும் முழுமையான விபரங்களுடன் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை தொடர்பு கொள்ளுமாறு தவிசாளர் தேவதயாளன் கேட்டுள்ளார். (5-4)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அமரர் ப. பிரதீபன் ஞாபகார்த்தமாக வேலணைத் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் நடத்தும் இரத்ததான முகாம் இன்று காலை வெள்ளிக்கிழமை 8.30 மணி முதல் வேலணை துறையூர் தாளையம்பதி ஸ்ரீசிவசுப் பிரமணிய சுவாமி கோவில் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-18)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** சாமியன் அரசடி - நெல்லியடி கொடிகாமம் வீதி, வீரசிங்கம் மண்டபம், கொழும்புத்துறை, **A.V. Road,** துண்டி, நெடுங் குளம் , மணியந்தோட்டம், கெலன் தோட்டம், உதயபுரம், பாசையூர், புங்கன்குளம் சந்தி, உதயபுரம், மணியந்தோட்டம் **Infentas Ice Solutions Pvt Ltd** ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பாலாவி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக் கொடிய கிராமம்ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**ஆதலால் ஆலய வழிபாடு செய்வோர் இறைவனை வலம் வந்து கொடிமரத்து முன் விழுந்து கும்பிடுதல் வேண்டும். இறைவழிபாடு முடிந்து பின் நவக்கிரகங்களை வழிபடவேண்டும். இறைவனை வழிபடாது நவக்கிரகங்களை மட்டும் வழிபட்டால் அந்த நவக்கிரகங்கள் அவர்களுக்கு நலம் புரியாது. தீமை புரியும். (தொடரும்)**

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வெற்றி பெறுபவர் யார்?

பலர் சேவை செய்வதை (தொண்டாற்றுவதை) விட்டுவிடுகின்றனர். காரணம் குறிக்கோளை விட தன் அந்தஸ்து, கௌரவம், மரியாதை, சுகம், சௌகரியம் இவற்றிற்கு முக்கியத்துவம் தருவதுதான்.

தமக்கு நல்ல ஒரு பதவி கிடைக்காதபோது தாம் அவமதிக்கப்பட்டபோது சேவையிலிருந்து தாம் எதிர்பார்த்தவை தமக்குக் கிடைக்கவில்லை என்று உணரும் போது, குறிக்கோளை ஒரு சவால் என்று நினைக்காமல் குறிக்கோளை ஒரு போராட்டம் என்று கருதும் போது பலர் தொண்டாற்றுவதற்குத் தயங்குகின்றனர்.

அதனால்தான் உலகில் வெகுசிலரே தம் குறிக்கோளை அடைவதில் வெற்றி பெறுகின்றனர். உங்களுக்கு எது முக்கியம்?

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஐயப்ப பக்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிகள்

❖ களவு, சூதாடுதல், பொய், திரைப்படங்கள், விளையாட்டு, வேடிக்கைகள், உல்லாசப் பயணங்கள், போதையூட்டும் பொருட்கள், புகைப்பிடித்தல் தவிர்க்க வேண்டும்.

❖ படுக்கை, தலையணைகளை நீக்கி தன் சிறுதுண்டை மட்டும் தரையில் விரித்து துயில வேண்டும். காலணிகளை அணிவதை தவிர்க்க வேண்டும்.

❖ பிரம்மச்சரிய விரதத்தை ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிப்பது தலையாய விரதமாகும். மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றிலும் காம இச்சையைத் தவிர்க்க வேண்டும். மது, மாமிசம், லாகிரி வஸ்துக்கள் ஆகியவற்றை அறவே ஒழிக்க வேண்டும்.

❖ மற்ற ஐயப்பன்மார்களிடம் பேசும்போது "சாமி சரணம்" என்று தொடங்கி பின் விடைபெறும் போது "சாமி சரணம்" எனச் சொல்ல வேண்டும்.

❖ விரத காலத்தில் அசைவ உணவு உண்ணுவது மாபெரும் தவறாகும். எனவே இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத் தயாரித்த சைவ உணவையே உண்ண வேண்டும். மாலை தரித்த வீட்டைத்தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்தை கொண்டும் உணவு உண்ணக்கூடாது. (தொடரும்)

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

## எதிர்பார்ப்புகள் நிறைவேறும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**ரிஷப இராசி வாசகர்களே!**

வந்துவிட்டது புத்தாண்டு. தளர்ச்சியில் இருந்த உங்களுக்கு, இனி வளர்ச்சி வரப்போகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்க்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாக விளங்கும் குரு பகவான் நீச்சம் பெற்று உங்கள் இராசியையே பார்க்கின்றார். அந்த அடிப்படையில் 'குரு பார்க்க கோடி நன்மை' என்பதால் இந்த 2021 உங்களுக்கு இனிய பலன்களை ஏராளமாக வழங்கப் போகின்றது. பொதுவாகப் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். ஸ்தம்பித்து நின்ற தொழில் இனி தானாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். குடும்பத்தில் சந்தோஷ வாய்ப்புகளை அதிகம் சந்திக்கப் போகின்றீர்கள்.

குருச்சந்திர யோகத்தோடும் நீச்ச பங்க ராஜயோகத்தோடும் இந்த ஆண்டின் தொடக்கம் அமைகின்றது. உங்களுக்கு யோகம் செய்யும் சனி இப்பொழுது அஷ்டமத்தில் இருந்து 9 ஆம் இடத்திற்கு வந்து விட்டது. எனவே தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். இஷ்ட தெய்வங்களுக்கும் குலதெய்வங்களுக்கும் நீங்கள் செய்ய நினைத்த பிரார்த்தனைகளை இப்பொழுது செய்து முடித்து மகிழ்ச்சி காண்பீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் கிரகங்கள் எந்தெந்த இடங்களில் பலம் பெற்று இருக்கின்றன. எந்தெந்த கிரகங்கள் பலம் குறைவாக இருக்கின்றன என்பதை நாம் எடை போட்டுப் பார்த்தே வருட பலன்களை அறிந்து கொள்ள இயலும். சுயஜாதகம் பலம் பெற்றிருந்தால் கோட்சார பலன்களின் குறுக்கீடு எதுவும் செய்யாது. திசாபுத்தி பலம் இழந்தவர்களுக்கு திடீர் மாற்றங்கள், மனக்கசப்புகள் தரும் விதத்தில் அமையலாம் என்பதால், யோகபலம் பெற்ற நாளில் அதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

அந்த அடிப்படையில் உங்கள் இராசியில் ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் இருப்பதால், சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் கூடுதலாகவே இருக்கின்றது. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மனநிறைவு குறைவாகவே இருக்கும். கோபத்தைக் குறைத்துக்கொள்வதன் மூலமும் குணமோடு நடந்து கொள்வதன் மூலமும் குடும்பத்தில் ஒற்றுமையை பலப்படுத்திக் கொள்ளலாம். சப்தம ஸ்தானத்தில் கேது இருப்பதால் சஞ்சலங்கள் அதிகரிக்கும். சில காரியங்கள் நடைபெறுவது போல் இருந்து கடைசிநேரத்தில் கைநழுவிச் செல்லலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கலாம். சக பணியாளர் ஒருவர் இடமாற்றம் செய்யப்படுவதை முன்னிட்டோ அல்லது அவர் விலகுவதை முன்னிட்டோ அவருடைய வேலையும் உங்களிடம் ஒப்படைக்கப்படலாம். உயர் அதிகாரிகள் மனம் கோணாமல் இருக்க, நீங்கள் பெரும்பிரயாசை எடுக்க வேண்டியதிருக்கும். அஷ்டமத்தில் சூரியன் இருப்பதால் அரசாங்க பிரச்சினை தலைதூக்கும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஆண்டின் மையப் பகுதியில் அது கைகூடலாம். ஒன்பதாமிடத்தில் குரு, சனி, புதன் ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்து சஞ்சரிக்கின்றன.

அந்த மூன்று கிரகங்களின் மீதும் சந்திரனின் பார்வை பதிகின்றது. எனவே குருச்சந்திரயோகம், சனிசந்திரயோகம் ஆகிய யோகங்கள் வந்து சேருகின்றன. எனவே கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். குடும்பத்தில் மங்கல ஓசையும் மழலையின் ஓசையும் கேட்கும் சூழல் உண்டு.

### மகர குருவின் சஞ்சாரம்

ஆண்டின் தொடக்கத்தில் மகர இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் இருப்பதால் பிதுர்ரார்ஜித ஸ்தானம் புனிதமடைகின்றது. அவர் நீசம் பெற்றிருப்பது ஒருவழிக்கு நன்மைதான். உங்கள்




இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குரு பகவான். எனவே அஷ்டமாதிபதி நீச்சம் பெறும்பொழுது 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப எதிர்பாராத சில நல்ல மாற்றங்களை குரு பகவான் வழங்கலாம். திட்டமிடாது நீங்கள் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் தனவரவு திக்குமுக்காட வைக்கும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

இலாப ஸ்தானத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் அவர் நீச்சம் பெற்றாலும் கூட, போதுமான அளவிற்கு பொருளாதாரம் வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது அவற்றைப் படித்துப்பார்த்துக் கையெழுத்திடுவது நல்லது. வெளிநாட்டில் இருந்து ஒருசிலருக்கு அழைப்புகள் வரலாம்.

சுயஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து முடிவெடுத்துக் கொள்வது நல்லது. பங்குச் சந்தையில் ஈடுபட்டிருப்பவர்கள் கவனத்துடன் செயற்படுவது நல்லது. புதியவர்களை நம்பி அகலக்கால் வைக்க வேண்டாம். எதையும் திட்டமிட்டுச் செய்வதன் மூலமே வெற்றிப் பாதையை அமைத்துக் கொள்ள இயலும்.

### குருவின் பார்வை பலன்கள்

புத்தாண்டில் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் உங்கள் இராசியையும் உங்கள் இராசிக்கு 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கின்றார். எனவே ஆண்டின் தொடக்கத்தில் உடல்நலம் சீராகவே இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். பணி ஓய்விற்கு பிறகும் கூட உங்களுக்கு மீண்டும் பணிபுரியும் அமைப்பு வரலாம். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வரும் வாய்ப்பு கிட்டும். அரசியல்வாதிகளும் அதிகார பதவியில் உள்ளவர்களும் உங்களுக்கு நட்பாகி நல்ல காரியங்கள் பலவற்றையும் முடித்துக்கொடுப்பர். சகோதரர்களின் பாசம் அதிகரிக்கும். உங்களை விட்டுச் சென்ற உடன்பிறப்புகள் மீண்டும் வந்திணைவர். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அவர்களின் மேற்படிப்பு மற்றும் விவாகம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் செய்த முயற்சி கைகூடும்.

### குருவின் வக்கிர காலம்

16.06.2021முதல்13.09.2021வரை கும்ப ராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். பொதுவாகவே உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகம் என்பதால், வக்கிரம் பெறுவது நன்மைதான். அதிலும் குறிப்பாக 10 ஆம் இடத்தில் வக்கிரம் பெறுவதால் தொழில் வெற்றி நடை போடும். கிளைத்தொழில் தொடங்கும் வாய்ப்புகள் கைகூடும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். விலகிச் சென்றவர்களுக்கு கூட மீண்டும் பணியில் சேர அழைப்புகள் வரலாம்.

14.09.2021முதல்13.10.2021வரை மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் நீச்சம் பெறும் குரு வக்கிரமடைவது நன்மைதான்.

பெற்றோர் வழியில் இருந்து வந்த விரோதங்கள் விலகும். அவர்கள் உற்ற துணையாக இருந்து உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக்கொடுப்பர். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். கட்டப் பணியில் இருந்த தொய்வு அகலும். திட்டமிட்ட காரியங்களை செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். சொத்து சம்பந்தமான பஞ்சாயத்துக்கள் சுமுகமாக முடியும். சகோதரத்தின் உறவில் மட்டும் விரிசல்கள் ஏற்படலாம்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். யோகம் செய்யும் கிரகம் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. முன்னேற்றப் பாதையில் சென்ற தொழில் ஸ்தம்பித்து நிற்கலாம். முகஸ்துதிக்காக பேசிய நண்பர்களை நம்பிச் செயற்பட்டு விரயங்களைக் காண்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை குறையலாம். உடல்நலச் சீர்கேடும், மருத்துவச் செலவுகளும் உண்டு. இக்காலத்தில் உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிக மிக கவனத்துடன் செயற்பட வேண்டும்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மக்கள் அனைவரும் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டிய நேரம் இது என்றாலும் உங்களைப் பொறுத்தவரை மிகமிக விழிப்புணர்ச்சி தேவைப்படும் நேரம். 14.04.2021முதல் 03.06.2021 வரை மிதுன இராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய், மகர இராசியில் சஞ்சரிக்கும் சனியைப் பார்க்கின்றார். அதே சமயம் கும்பத்தில் சஞ்சரிக்கும் குரு செவ்வாயைப் பார்த்து புனிதப்படுத்துகின்றார். 04.06.2021முதல்21.07.2021 வரை கடகத்தில் சஞ்சரிக்கும் நீசம் பெற்ற செவ்வாய், மகரத்தில் சஞ்சரிக்கும் சனியை சப்தம பார்வையாகப் பார்க்கின்றார்.

இதுபோன்ற காலங்களில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். 'வட்டி கட்ட முடியவில்லையே' என்று வாங்கிய கடனுக்கு சொத்தை விற்க நேரிடலாம். துணிவும் தன்னம்பிக்கையும் குறை யும். நிம்மதிக்காக ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைக்க நேரிடும். வாழ்க்கைத் துணையோடும், உடன் பிறப்புகளோடும் அடிக்கடி சச்சரவுகள் வந்து கொண்டே இருக்கும். இக்காலத்தில் சனி கவசம் பாடி சனபகவானை வழிபடுவது நல்லது.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இந்தப் புத்தாண்டில் பொருளாதார விருத்தி அதிகரிக்க, தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபடலாம். அபிராமி அம்மன் வழிபாடு அனைத்து யோகங்களையும் கொடுக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு எல்லா வழிகளிலும் நற்பலன்களை கொடுக்கப் போகின்றது. வெளியேறி இருந்தவர்கள் வீடு நோக்கி வரும் வாய்ப்பு உருவாகும். கணவன்- மனைவிக்குள் உறவு பலப்படும். திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிக்கும் விதத்தில் குருவின் பார்வை கைகொடுக்கின்றது.

அஷ்டமத்துச் சனி விலகிவிட்ட தால் உறவினர் பகை அகலும். தாய் மற்றும் சகோதரத்தின் ஆதரவு உண்டு. பிள்ளைகளின் கல்யாண முயற்சிகளும் கல்விக்காகச் செய்த முயற்சிகளும் கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். உயர் பதவியும் தேடி வரும். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். (தொடரும்)

## மதுபானம்...

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 36 வயதுடைய கணபதிப்பிள்ளை ஜனாதீபன் என்ற இளைஞராவார்.

வீட்டிற்கு வர்ணப்பூச்சு இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நித்திரையில் இருந்து எழுந்து ரின்னரை மதுபானம் என நினைத்து அருந்தி விட்டு மீண்டும் படுத்துறங்கியுள்ளார்.

மதியம் 2 மணியாகியும் அவர் எழுந்திருக்காத நிலையில் வீட்டார் தட்டி எழுப்பியுள்ளனர்.

மயக்க நிலையில் அவர் இருந்துள்ளதுடன் அருகில் ரின்னர் போத்தல் இருந்துள்ளதை அவதானித்துள்ளனர்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணையை மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-3,60)

## வடக்கில் நேற்றும்...

கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் வடக்கில் 11 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பூநகரியில் இருந்து கொழும்பு சென்று சில நாட்கள் தங்கியிருந்து வீடு திரும்பிய ஏழு பேருக்கும் யாழ்.உடுவிலில் ஒருவருக்கும் சங்கானையில் ஒருவருக்கும், கொழும் பிலிருந்து வீடு திரும்பி தனிமைப்படுத்தலில் இருந்த யாழ். அம்பன் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்கும் தொற்று உறுதியாகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,60)

## வயோதிபப் பெண்...

பெண் ஒருவரால் அறுத்துச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று புதன்கிழமை இணுவில் ரயில் நிலையத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளில் வந்த இளம் பெண், இணுவில் ரயில் நிலையத்திற்கு அண்மையில் தனியாக வசித்து வரும் வயோதிப பெண்ணை வீட்டிற்கு வெளியே அழைத்துள்ளார்.

அவரிடம் உங்களுக்கு வீடு உள்ளதா? இல்லை என்றால் வீட்டுத் திட்டம் தருவதாக கூறி, அதற்கு பணம் தரப்படும். ஆனால் முதலில் கட்டுவதற்கு உங்களிடம் சிறிய பணம் இருக்க வேண்டும் உள்ளதா? எனக் கேட்டுள்ளார்.

அதற்கு அந்த வயோதிபப் பெண்ணும் வீடு இல்லை. எனக்கு வீட்டுத் திட்டம் தாருங்கள் எனது தாலிக்கொடியை அடகு வைத்து பணம் திரட்டுவதாக கூற, அந்த பெண்ணும் தாலிக்கொடியைப் பார்ப்போம் எனக் கேட்டுள்ளார்.

வயோதிப பெண்ணும் அறைக்குள் வைக்கப்பட்ட தாலிக்கொடியை கொண்டு வந்து காட்டியுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த பெண் தாலிக்கொடியை வயோதிபப் பெண்ணிடமிருந்து இழுத்து அவரையும் காலால் உதைத்து கீழே விழுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார். (ம-3,60)

## வாள்முனையில்...

ந்து 12 பவுண் நகையினையும் 15 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

அங்கு உறங்கிக் கொண்டிருந்த முதியவரையும் பெண்மணியையும் வாள் முனையில் அச்சுறுத்தி தாலிக்கொடி உட்பட தங்க நகைகளையும், 15 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் திருடியுள்ளனர்.

இதேவேளை மற்றைய அறையில் உறங்கிக் கொண்டிருந்த பெண் ஒருவர் சத்தம் கேட்டு வெளியில் எழுந்து வந்த நிலையில் அவர் அணிந்திருந்த தங்க நகைகளையும் பறித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். (ம-3,299)

## மேலும் மூவர்...

இதன்படி, நாட்டின் கோவிட் - 19 உயிரிழப்பு 222 ஆக அதிகரித்துள்ளது.

மீரிகம பகுதியைச் சேர்ந்த 53 வயதான ஒருவரும் பேருவளை பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரும் கொழும்பு-14 பகுதியைச் சேர்ந்த 89 வயதான ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மூவரும் ஆண்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## இந்திய மீனவர்...

கடற்படையினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் தொண்டைமானாறு கடற்பரப்பில் ஒரு படகில் மூவரும் கரைக்கு நெருக்கமான பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## தமிழ் மக்களை...

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குமிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இதன்போது, புதிய அரசியலமைப்பு உருவாகும்போது இருக்கும் விடயங்களை பேணும் விதமாக (13ஆவது திருத்தம்) நடந்து கொள்வது புத்திசாலித்தனம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இந்த சந்திப்பில் முக்கியமாக, அனைத்து தமிழ் தரப்பும் ஓரணியில் நிற்க வேண்டுமென்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார்.

அரச தரப்பில் அதிகமான தமிழ் பிரதிநிதித்துவம் ஏற்படுவது, தமிழ் தரப்பை பலவீனப்படுத்தும் என்பதுடன், இந்தியாவினாலும் தமிழ் மக்களிற்காக தலையிட முடியாத நிலைமையை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக் காட்டினார்.

அரசியலமைப்பு உருவாகும் நேரத்தில், அனைத்து தமிழ் தரப்புக்களும் ஒரே குரலில் தமது தேவையென்ன என்பதை வலிறுத்துவதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார்.

அப்படியொரு நிலைமை இருக்கும் பட்சத்தில், இந்தியா தமிழ் மக்களை கைவிடாது என உத்தரவாதமளித்தார். (ம-3)

## சக்தி வாய்ந்த...

சக்தி வாய்ந்த கிளைமோர் உள்ளிட்ட வெடிபொருட்கள் சுழிபுரம் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (ம-3)

## காங்...

னெடுத்த சுற்றுக் காவல் நடவடிக்கையின் போதே சந்தேகத்துக்கு இடமான படகொன்றை வழிமறித்து கடற்படையினர் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது படகில் இருந்து கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.(ம-3)

## நிரந்...

உறுதியாக உள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

குறித்த சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரா லயத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருமித்த நாட்டுக்குள்தான் தமிழர்கள் தீர்வு கேட்கின்றார்கள். எனவே, அவர்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்கலான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என்பதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் நான் எடுத்துரைத்துள்ளேன் என்றார். (ம-3)

## தற்போது உள்ள...

கூறியுள்ளார்.

அரச தரப்பினரைச் சந்தித்த பின்னர் கூட்டமைப்பினரை நேற்றுக் காலை சந்தித்தார். இதன்போது இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை தொடர்பில் பேசப்பட்டது.

இலங்கை அரசு மாகாண சபை முறைமையை இல்லாமலாக்கும் எத்தனத்திலேயே உள்ளது என்பதை அவர்களுடனான பேச்சுக்களில் அறிய முடிந்தது என ஜெய்சங்கர் மறைமுகமாக கூட்டமைப்பின் சந்திப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போதைய அரசமைப்பில் உள்ளதைப் பாதுகாருங்கள். அதன்பின்னர் மேலதிகமாக கேளுங்கள் என்று ஜெய்சங்கர் இதன்போது கூட்டமைப்பினரிடம் கூறியுள்ளார். (ம-3)

## கொரோனா அவ...

தொழில்நுட்ப கல்லூரியினை கொரோனா அவசர நிலைக்கு பயன்படுத்துவதற்காக குறித்த தொழில்நுட்பக் கல்லூரியினை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி கையகப்படுத்தவுள்ளதாக யாழ்.மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார். (ம-3)


**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1650 திகதி 2021.01.07
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 20 27 58 61
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 07/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0727
வெற்றி எழுத்து U சுப்பர் இலக்க 26 வெற்றி இலக்கங்கள் 05 15 54 80

**மஹஜன சம்பத**
திகதி 2021/01/07
சீட்டிழுப்பு இலக்கம் 4360
ஆங்கில எழுத்து L வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 7 1 8 1 7
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 07.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2655
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 12 26 29 55
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி - 2021.01.07
சீட்டிழுப்பு இலக்கம் - 397
O 06 25 30 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

**அத கோடிபதி** ADA KOTIPATHI
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1156
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 07.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 96,729,310
வெற்றி இலக்கங்கள் 06 16 33 66 ஆங்கில எழுத்து J
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** Shanida
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3486
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 07.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,376,911
வெற்றி இலக்கங்கள் 19 22 43 64 ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி** அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,931,505/=
திகதி : 07.01.2021
வெற்றி வாரம் : 3037
வர்ணம் : கபிலம்
வெற்றி இலக்கங்கள் 10 14 23 25 தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,779,180

**SUPER BALL** சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1330 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 07/01/2021 தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் L 45 60 63 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் 61,997,365/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

**සංවර්ධන වාසනාව** அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 399 திகதி 07.01.2021 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 25 53 64 விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,603,540
6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனுக்கு கொரோனா உறுதி

## 6 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர் நல்லூரில் உணவகம் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாத்தளையைச் சேர்ந்த குறித்த மாணவன் கடந்தவாரம் மாத்தளைக்குச் சென்று திரும்பியதாகவும் அங்கு அவர் மரணச்சடங்கு ஒன்றுக்கு சென்று திரும்பியதாகவும் தெரியவந்துள்ளது.

அவருடைய தாயாருக்கு நேற்று முன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதாக மாத்தளை சுகாதாரத் திணைக்களத்தினரால் யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்தினருக்கு நேற்றுவழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக மாணவனுக்கு விசேடமாக நேற்று பிசிஆர் பரிசோதனை துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதே அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் நல்லூரின் கச்சேரி நல்லூர் வீதியில் வாடகைக்கு குடியமர்ந்திருந்தாகவும் அவருடன் நெருங்கிப்பழகியவர்கள் மற்றும் தங்கியிருந்தவர்கள் என மேலும் ஆறு மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த கேதீஸ்வரன்,

அவர்கள் உணவருந்தச் சென்ற நல்லூர் பகுதியில் உள்ள உணவகம் ஒன்று உடனடியாக மூடப்பட்டு அதனை நிர்வகிப்பவர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-03)

### இந்தியாவுக்கு விஜயம் செய்யுங்கள்

# சஜித் பிரேமதாசவுக்கு ஜெய்சங்கர் அழைப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் இந்த அழைப்பினை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகளை ஜெய்சங்கர் நேற்று முன் தினம் சந்தித்தார். இந்திய அரசாங்கம் வீடமைப்பு திட்டங்களுக்காகவும் சுவசெரிய நோயாளர் காவு வண்டி சேவைக்காகவும் சஜித் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிற்கு அதிகாரபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு சஜித் பிரேமதாசவிற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-03)

# கொரோனாவை காரணம் காட்டி அறைக்குள்ளே முடங்கி கிடக்காதீர்கள்

## மக்களுடைய பிரச்சினைகளை பாருங்கள் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கொரோனா பரவலை காரணமாக கூறிக்கொண்டு மூடிய அறைக்குள் முடங்கி கிடக்காமல் கிராமங்களுக்கு சென்று மக்களுடைய பிரச்சினைகளை பாருங்கள் என அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

"கிராமத்துடன் பேச்சு" என்ற வேலைத்திட்டம் தொடர்பாக அலரி மாளிகையில் நேற்று அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளை சந்தித்த ஜனாதிபதி இந்த உத்தரவை வழங்கியிருக்கின்றார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், கொரோனா் பரவலை காரணம்காட்டிக்கொண்டு மூடிய அறைக்குள் முடங்கியிருப்பதால் எந்தவொரு பயனும் இல்லை.

அறைகளில் இருந்து வெளியேவந்து மக்களை சந்தித்து மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வையுங்கள் என பணிப்புரை வழங்கியிருக்கின்றார். (ம-03)

# உடுவிலில் வீடொன்றுக்குள் புகுந்து வன்முறைக் கும்பல் அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் அம்பலவாணர் வீதியில் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளது.

வயோதிப் பெண்ணும் அவருடைய மகனும் வசிக்கும் வீட்டிலேயே இந்தத் தாக்குதலை வன்முறைக் கும்பல் நேற்று வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் மேற்கொண்டுள்ளது.

5 மோட்டார் சைக்கிள்களில் வந்த 10 பேர் கொண்ட முகத்தை மூடிக் கட்டியவாறு வீட்டுக்குள் புகுந்து பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட உடைமைகளைத் தாக்கிச் சேதப்படுத்தி அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-03)


**காணி விற்பனை**

யாழ்ப்பாணம், மானிப்பாய் மேற்கு, கட்டுடைச் சந்தியில் இருந்து நவாலி வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்..

1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்

( தரகர் தேவையில்லை ) (5216)

**074 075 4204, 077 623 4204**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

**ஹோட்டல் மனேஜ்மன்ட்**

அரசாங்க, சர்வதேச அங்கீகார சான்றிதழ்





பயிற்சிக் காலத்தில் ரூ.1 லட்சம் வரை வருமானம்

100% வேலைவாய்ப்பு

இலவச ஆங்கில வகுப்பு

தமிழ் - ஆங்கில மொழி மூலமான விரிவுரைகள்

ஆரம்பம் 09.01.2021 11.01.2021

+Certificate in Hotel and Resort Management LKR - 30,000 (520 hrs)

+Certificate in International Cookery & Culinary Arts LKR 60,000 (600 hrs)

T.P: 076 057 9999, 021 314 6171

No.1544, K.K.S Road, Jaffna. (C-1111)

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம், கோண்டாவில் இராச வீதிச் சந்திக்கு அருகாமையில் கோண்டாவில் வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்

(தரகர் தேவையில்லை) (5216)

தொடர்பு

077 805 1655

077 288 0152

077 505 8561

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய் ● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய் ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1051)

0768226240 DHL

**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**

**SRIGHAN FARMS LTD, GHANA.**

பதவி - களஞ்சியப் பொறுப்பாளர்

தகைமை - A/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- ஆங்கில அறிவு அவசியம்.

- குறைந்தது இரண்டு வருட அனுபவம்.

வயது - 27 - 40 வரை

◆ விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்.

◆ உணவு தங்குமிட வசதிகள் உண்டு.

◆ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

◆ இரண்டு வருடத்திற்கு ஒருமுறை விடுமுறை - இலவச விமான பயணச்சீட்டு வழங்கப்படும். (C-1100)

விண்ணப்பிக்கும் E-mail Address : sales@srighanfarms.com

விபரங்களுக்கு SATHAPONS, ALVAI

www.srighan.com

**மணமகள் தேவை**

அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (5213)

077 153 2719

**புதிய வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு (5205)

076 161 9826

**பணிப்பெண் தேவை**

வடமராட்சிப் பகுதியில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு உதவிகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு (C-1109)

076 410 6093

**கார் தேவை**

Toyota Corolla - 141 / Yaris Rush / Daihatsu Terios

First Owner / Low Millage விரும்பத்தக்கது.

தொடர்பு (5215)

076 171 1351


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.